எழுப்புதல் ஜெப ஐக்கியத்தின்

# ஐக்கிய மலர்

Volume No: 27 Issue No: 1 Bro.P.D.ஞானப்பிரகாசம் October - 2024

## ஆயுட்கால ஐக்கிய வாக்குத்தத்தம் :

*சின்னவன் ஆயிரமும், சிறியவன் பலத்த ஜாதியுமாவான்,*
*கர்த்தராகிய நான் ஏற்றகாலத்தில் இதைத் தீவிரமாய் நடப்பிப்பேன்.*

*ஏசாயா 60:22*

## 2024-ம் வருட ஐக்கிய வாக்குத்தத்தம் :

**"உங்களைப்பார்க்கிலும்**
**ஜனம் பெருத்த பலத்த ஜாதிகளை**
**நீங்கள் துரத்துவீர்கள்."** உபாகமம் 11:23.

"மனுஷன் வருத்தம் அநுபவிக்கப் பிறந்திருக்கிறான்"

யோபு 5:7



தனிப்பிரதி ரூ. 5.00
ஆண்டுச் சந்தா ரூ. 60.00

## அக்டோபர் மாத வாக்குத்தத்தம் : 2024

**“உன்னோடே போராடினவர்களைத் தேடியும் காணாதிருப்பாய்; உன்னோடே யுத்தம் பண்ணின மனுஷர் ஒன்றுமில்லாமல் இல்பொருளாவார்கள்.”** ஏசாயா 41:12

அக்டோபர் மாத எச்சரிப்பின் வசனம்: **“அது என்மேல் விழுந்த கடமையாயிருக்கிறது.”** I கொரிந்தியர் 9:16

### உங்கள் சகோதரனிடமிருந்து...

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில், எழுப்புதல் ஜெபஜக்கிய ஊழியர்கள் மற்றும் தேவ பிரசன்னத்தை விரும்புகிற யாவருக்கும் வாழ்த்துகளை கூறிக் கொள்கிறேன்.

இப்புதிய மாதத்திலும், கர்த்தர் நம்மோடிருந்து நாம் செய்ய வேண்டிய அனைத்துக் காரியங்களையும் செய்து முடிக்கக் கிருபை தருவாராக. இம்மாத வாக்குத்தத்த வசனத்தை விசுவாசித்து ஜெபித்துக் கொண்டிருங்கள். எச்சரிப்பு வசனத்தின்படி சுவிசேஷத்தை அறிவிக்க கவனமாக நடந்து கொள்வோம். ஆவிக்குரிய வாழ்க்கையிலும், உலகப்பிரகாரமான வாழ்க்கையிலும் நமக்கு இடையூறு செய்கிறவர்களை தேடியும் காணாத அளவிற்கு கர்த்தர் நமக்காக யுத்தம் செய்வார். இதுவரை ஜெபித்து ஜெப ஐக்கியத்தை தாங்கின உங்களுக்கு கிருபைகள் சூழ்ந்து கொள்ளும்படி கர்த்தர் உதவிச்செய்வாராக. உங்களுடைய குடும்ப ஆசீர்வாதங்களுக்காக மறவாமல் ஜெபித்து வருகிறோம். நீங்களும் அன்றாடம் உள்ள ஐக்கிய ஊழியங்களுக்காக ஜெபித்துக் கொள்ளுங்கள். கடந்த மாதம் நடைபெற்ற ஊழியங்களை கர்த்தர் ஆசீர்வதித்தார். குறிப்பாக அபிஷேக ஜெபம் மற்றும் சுதந்திர தின ஆசீர்வாதத்திற்காக ஏறெடுத்த ஜெபங்களை கர்த்தர் ஏற்றுக்கொண்டார். குறிப்பாக இந்திய தேசத்தில் உள்ள மாநிலங்களுக்காகவும் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்காகவும் வசனங்களைச் சொல்லி அநேகர் ஜெபித்தார்கள். வரும் நாட்களில் நம் தேசத்தில் ஆவிக்குரிய மழை விரைவில் பொழியும் என்று எதிர்பார்த்து கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறோம்.

இந்த மாதத்திலும் பின் காலங்களிலும் நம்முடைய ஐக்கியத்தில் ஒரு பெரிய ஆவிக்குரிய மழை பலமாய் பொழிய வேண்டுமென்று அடிக்கடி ஜெபிக்கின்ற ஜெபங்களுக்கு நல்ல பதிலை ஆண்டவர் கொடுக்க இருக்கின்றார். அந்த குறிப்புக்காக உங்கள் ஜெபங்கள் இன்னும் அதிகம் தேவை. இந்த மாதத்திலும் ஊழியர்கள் மேல் தேவன் தமது ஆவியைப் பலமாய் ஊற்றவும் ஒன்பது வரங்களையும், ஒன்பது கனிகளையும், எட்டு வகையான ஊழியங்களையும் ஆவியானவர் வழிநடத்தித்தர இரவும், பகலும் மன்றாடி ஜெபிப்போம். பெந்தெகொஸ்தே நாளின் அனுபவங்கள் வந்தவுடன் சீஷர்கள் கர்த்தரால் வல்லமையாக செயல்பட்டது போல நம் ஐக்கிய ஊழியர்களும் செயல்படுவார்கள். இன்னும் எதிர்கால ஊழியங்களையும் தேவன் நமக்கு வெளிப்படுத்தப் போகிறார். சபைகளின் எழுப்புதலுக்காகவும், ஊழியங்களை நடத்துகிற அனைத்து ஊழியர்களுக்காகவும் சத்துரு போராட்டங்கள் மேற்கொள்ளாதபடி இன்னும் ஊக்கமாக ஜெபிப்போம். இரட்சிக்கப்பட்டு, அபிஷேகம் பெற்று ஆங்காங்கே பணிசெய்கிறவர்கள் பலப்படவும், பின்வாங்கி போனவர்கள் மீண்டும் கர்த்தருக்காக எழும்பவும், கர்த்தருடைய சமூகத்தில் நிற்கவும் தேவன் தந்த வாக்குத்தத்தங்கள் யாவும் இன்னும் சீக்கிரமாய் நிறைவேறப்போகிறபடியால் இனி தளர்ந்து போகாதபடி கர்த்தருக்காக வைராக்கியமாக நின்று செயல்பட நீங்கள் ஜெபிக்க வேண்டும். இன்னும் அநேக புதிய ஆத்துமாக்கள் ஆண்டவரை ஏற்றுக்கொள்ளவும் அவரில் நிலைத்திருக்கவும், அவர்கள் மூலமாக புதிய ஆத்துமாக்கள் எழும்பவும் தேவன் கிரியைச் செய்ய ஜெபிப்போம். அதுமட்டுமல்ல ஐக்கியத்திற்காக ஜெபிக்கிற உங்களுக்காக அன்றாட ஜெபங்களில் ஜெபித்து வருகிறோம். உங்களுக்கு தேவன் கொடுக்கும் ஆசீர்வாதங்களை ஐக்கியத்துடன் பகிர்ந்து கொள்ளுங்கள். இயேசுவின் வருகையில் நிச்சயம் நாம் காணப்படுவோம் என்று விசுவாசிக்கிறேன். ஆமென்.

ஒவ்வொரு வியாழக்கிழமையும் இரவு 9.00 மணிக்கு google meet ல் இந்த link ல் https://meet.google.com/non-taah-nua ஜெபம் நடைபெறுகிறது.

கிறிஸ்துவின் பணியில்,
சகோ. **P.துரைசிங் ஞானப்பிரகாசம்**
ஆசிரியர், Cell: 90255 53614

வங்கி மூலம் காணிக்கை அனுப்புவோர், கீழ்க்கண்ட கணக்கு எண்ணில் அனுப்பி அதின் விபரத்தை ஐக்கியத்திற்கு தெரியப்படுத்துங்கள்.

STATE BANK A/c.No
Branch : Surandai
IFSC - SBIN0011065

Bro. **P.Duraisingh Gnanapragasam**
3 0 4 0 6 4 3 8 9 6 2

**Revival Prayer Fellowship Trust**
3 2 4 1 2 6 2 4 5 7 2

G pay
+919942950132

தொடர்புக்கு: சகோ. **P.D.ஞானப்பிரகாசம்** Cell: 90255 53614 | சகோதரி. **S.சந்திரா ஞானப்பிரகாசம்** Cell: 99653 36459 | சகோ. **D.ஜோயல்** Cell: 99429 50132

தேவ செய்தி

## "மனுஷன் வருத்தம் அநுபவிக்கப் பிறந்திருக்கிறான்." யோபு 5:7

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே, ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் உங்களுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். இம்மாதம் தேவ செய்தியாக, நாம் தியானிக்கிற தேவ வார்த்தை மனுஷன் வருத்தம் அநுபவிக்கப் பிறந்திருக்கிறான் என்பதேயாகும். (யோபு 5:7). இந்த வார்த்தையை நாம் தியானிக்கும் போது வருத்தம் அநுபவிக்கின்ற சூழ்நிலையில் இருந்து எப்போது எனக்கு விடுதலை கிடைக்கும் என்ற எண்ணம் உங்களுக்கும் வரும், எனக்கும் வரும். தொடர்ந்து இதே அதிகாரத்தை வாசித்துப் பார்க்கும் போது, நம்முடைய வருத்தங்களை நாம் தேவனிடத்திலே ஜெபத்தின் மூலமாக ஒப்படைக்க வேண்டும் என்றும் அதே அதிகாரத்தில் 8ம் வசனத்தில் நாம் காணலாம். ஏற்ற வேளையிலே தேவன் பதிலளிப்பார். அந்த பதில் எவ்வாறு இருக்குமென்றால் 9ம் வசனத்தில் சொல்லப்பட்டது போல ஆராய்ந்து முடியாத பெரிய காரியங்களாயும், எண்ணிமுடியாத அதிசயமாயும் இருக்கும் என்று வேதம் கூறுகின்றது. இந்த வசனத்தின்படி நமக்கு நிச்சயம் இருக்கும்போது நாம் எல்லாரும் என்ன யோசிப்போம் என்றால் நாம் வருத்தப்பட்டது மிகவும் நன்மைக்காகவே நடந்திருக்கின்றது என்ற முடிவுக்கு வந்து அதிசயமாய் நடத்தி வரும் தேவனை இன்னும் ஸ்தோத்தரிப்போம். பின்னால் வரக்கூடிய துக்கங்களையும் நாம் சந்திப்பதற்கும் அவைகளை ஜெயிப்பதற்கும் நாம் ஆயத்தமாகி விடுவோம். அதுமட்டுமல்ல நம்மைப் போன்ற சோதனை உள்ளவர்களை நாம் பார்க்கும் போது நம்முடைய அனுபவங்களை அவர்களோடு பகிர்ந்து கொண்டு அவர்களையும் தைரியப்படுத்துவோம் என்று வேதத்தின் அடிப்படையில் நாம் வாசிக்கின்றோம். இந்த வசனத்தின் அடிப்படையில் நாம் துக்கப்படுகின்ற காரியங்களில் ஜெபம் எவ்வாறு செய்ய வேண்டும் என்று தேவன் எவ்விதமாய் அதிசயமாய் வழிநடத்துவார் என்று இச்செய்தியில் தியானிப்போம்.

### I வருத்தம் அநுபவித்து மகிழ்ச்சியை பெற்றுக்கொண்ட பெரும்பாடுள்ள ஸ்திரீ: மாற்கு 5:24-34

மாற்கு 5:24 முதல் 34 வரையுள்ள வசனங்களை தியானிக்கும் போது 12 வருடமாக பெரும்பாடுள்ள ஒரு ஸ்திரீயின் பாடுகளைப் பற்றி நாம் வாசிக்கின்றோம். வேதம் சொல்லுகிறது போல அந்த ஸ்திரீ தன்னுடைய பாடுகளிலிருந்து விடுதலைபெற அநேக வைத்தியர்களை நாடிச் சென்றாலும் சற்றாகிலும் குணமடையாத சூழ்நிலை ஏற்பட்டது. தனக்கு உண்டானவைகளையெல்லாம் வைத்தியத்திற்கு செலவு செய்து இருக்கின்ற துக்கத்தை விட கூடுதலான வருத்தத்தை அடைய வேண்டிய நிலை ஏற்பட்டது. இதைபோலத்தான் நம் அனைவருக்கும் பாடுகள் நாளுக்கு நாள் கூடிக்கொண்டே இருப்பது போல சூழ்நிலை வரும் போது சில வேளைகளில் நாம் சோர்ந்து போய் விடுகிறோம். ஆனால் சோர்ந்து போகிறவர்களுக்கு பெலன் கொடுக்கிற கர்த்தர் நமக்கும் பெலன் தருவார். அந்த ஸ்திரீ வருத்தப்பட்ட வேளையிலே இயேசுவை குறித்துக் கேள்விப்பட்டு நான் அவருடைய வஸ்திரங்களையாகிலும் தொட்டால் சொஸ்தமாவேன் என்று தீர்மானம் செய்து ஜனக்கூட்டத்தின் மத்தியில் சென்று அவருடைய வஸ்திரத்தை தொட்டாள். இது அவள் செய்த சரியான தீர்மானம் ஆகும். நாமும் கூட ஒரு காரியம் சரியாய் நடப்பதற்காக எவ்வளவோ பிரயாசப்பட்டும் அதிக செலவுகள் செய்தும், இனி செலவு செய்வதற்கும், பொருளாதாரம் இல்லாத சூழ்நிலையில் இருந்தாலும் அந்த ஸ்திரீ போல நாம் தேவனை தேடுவோம். நாம் செய்கிற கிரியைகளை தேவன் பார்த்துக்கொண்டே இருப்பார். நம்முடைய விசுவாசத்தை வளர்ப்பதற்காக தேவன் சில காரியங்களை தடைசெய்வது போல தெரியும். பெரும்பாடுள்ள ஸ்திரீ அதே நிலையில் தான் இருந்து ஜனக்கூடத்தின் நெருக்கத்தின் மத்தியிலும் இயேசுவைப் பின்தொடர்ந்தது போல நாமும் விசுவாச ஓட்டத்தில் பொறுமையோடு, நிச்சயத்தோடு தேவனை பின்செல்ல வேண்டும். அப்போது அற்புதம் நடக்கும்.

இவ்வாறு தன்னுடைய வருத்தங்களை, பல பாடுகளின் மத்தியிலும் இயேசுவின் வஸ்திரத்தை தொட்ட அந்த சகோதரிக்கு தேவன் ஒரு பெரிய அற்புதத்தை செய்தார். உடனே அவளுடைய உதிரத்தின் ஊறல் நின்றுபோயிற்று. அந்த வேதனை நீங்கி ஆரோக்கியம் அடைந்ததை அவள் தன் சரீரத்திலே உணர்ந்தாள் என்று மாற்கு 5:30ல் வாசிக்கின்றோம். ஆராய்ந்து முடியாத பெரிய காரியங்களை கர்த்தர் அந்த சகோதரிக்கு செய்தார். சரீர சுகம் மட்டுமல்ல, இயேசு அவளைப் பார்த்து மகளே உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது. நீ சமாதானத்துடனே போய் உன் வேதனை நீங்கி சுகமாயிரு என்று இயேசு அவளை வாழ்த்தி ஆசீர்வதிக்கிறார். இயேசுவானவர் தமது வசனத்தின்படியே அந்த ஸ்திரீயை ஆசீர்வதித்து அவள் மிகுந்த மகிழ்ச்சி அடைந்து வாழ்நாள் முழுவதும் தேவனுக்கு சாட்சியாக நிச்சயம் வாழ்ந்திருப்பாள்.

இச்செய்தியை வாசிக்கிற நாம் அனைவரும் ஏதோவொரு வருத்தத்தில், வேதனை நீங்காத பட்சத்தில் நமக்குரிய பணத்தையெல்லாம் செலவழித்து பார்த்தாலும் அந்த பிரச்சனையிலிருந்து விடுதலை பெறாமல் இருக்கலாம். ஒருவேளை உலகம் நம்மை கைவிட்டாலும், உலகத்தாருடைய உதவி நமக்கு இல்லாமல் போனாலும், இயேசுவின் உதவி இல்லாமல் போகவே போகாது. உங்கள் மனப்பாரங்களை தொடர்ந்து தேவனிடம் சென்று ஜெபித்துக்கொண்டே இருக்க வேண்டும். ஆண்டவர் நிச்சயம் நம்மை ஆசீர்வதிப்பார்.

## II வருத்தம் அநுபவித்து மகிழ்ச்சியை பெற்றுக்கொண்ட 38 வருட வியாதிஸ்தன்: யோவான் 5:1-9

வருத்தம் அநுபவிப்பதும் எல்லாருக்கும் பொதுவான காரியமாகும். குறிப்பாக ஊழியர்களுக்கு கஷ்டங்கள் வரும் போது இவர்களுக்கு ஏன் இது வந்தது என்று உலகம் கேட்கத்தான் செய்யும். இவர்களுக்கு உதவி செய்த ஆண்டவர் எங்களுக்கு ஏன் உதவிச்செய்யவில்லை என்று உலக மக்கள் கேட்பார்கள். யார் எப்படி கேட்டாலும், பாடுகளை அநுபவிப்பதும், பாடுகளின் விடுதலை கொடுப்பதும் இயேசுவே ஆகும். இந்த பகுதியில் யோவான் 5:1-9 வரை உள்ள வசனங்களை வாசிக்கும் போது 38 வருடமாக வியாதிகொண்டிருந்த ஒரு மனிதனையும் அவருக்கு சுகமளித்த சம்பவத்தையும் யார் மூலமாய் அவர் பெற்றுக்கொண்டார் என்பதையும் அதற்காக அவர் என்னச் செய்தார் என்றும் வேதம் தெளிவாக கூறுகிறது. இவர் வாழ்ந்த காலத்தில் பெதஸ்தா என்ற ஒரு குளம் இருந்ததாயும், சில வேளைகளில் தேவ தூதன் அந்த குளத்தின் தண்ணீரை கலக்குவதாகவும், அவ்வாறு கலக்கும் போது யார் முதலில் சென்று அந்த தண்ணீரில் இறங்குவானோ அவர்கள் எப்பேர்பட்ட வியாதியஸ்தராக இருந்தாலும் சுகமடைவார்கள் என்ற ஒழுங்கு முறை இருந்தது. இதன்படி தண்ணீர் கலக்கும் போது அதை பயன்படுத்தி கொண்டவர்கள் அநேகர் உண்டு. ஆனால் நாம் தியானிக்கிற இந்த 38 வருட வியாதியுள்ள மனிதன் தனக்கு அற்புத சுகத்தை எப்படி பெற்றுக் கொண்டான் என்று தொடர்ந்து தியானிப்போம்.

இந்த மனிதனை ஆண்டவர் சந்தித்து பேசும் போது நீ சுகமடைய வேண்டுமென்று விரும்புகிறாயா என்று கேட்டார். அதற்கு வியாதிஸ்தன் ஆண்டவரே தண்ணீர் கலக்கப்படும் போது என்னை குளத்தில் கொணடு போய் விடுகிறதற்கு ஒருவருமில்லை, நான் போகிறதற்குள்ளே வேவெறாருவன் எனக்கு முந்தி இறங்கி விடுகிறான் என்றும் தன்னுடைய பாரங்களை பகிர்ந்து கொண்டார். இவ்வாறு பாடுடைய மனிதனாக இருந்தாலும் இயேசுவிடம் தன்னுடைய பாரங்களை பகிர்ந்து கொள்ள விசுவாசமுள்ள மனிதனாக காணப்பட்டார். இந்த பகிர்ந்து கொள்ளுதல் அவருக்கு அற்புதத்தை கொண்டு வந்தது. அது மாத்திரம் அல்ல இந்த பகுதியை தியானிக்கிற நாம் அனைவரும் எந்தவிதமான வருத்தத்தில் வாடினாலும் இயேசுவிடம் சென்று கூறுவதை குறைத்துக் கொள்ளக்கூடாது அல்லது நிறுத்தி விடக்கூடாது. நானே வழி, நானே சத்தியமாக இருக்கிறேன் என்று கூறின ஆண்டவர் என்னிடத்தில் வருவார்களா என்று நம்மை எதிர்பார்த்து நிற்கின்றார். நாம் நம்முடைய பிரச்சனைகளை இயேசுவிடம் கொண்டு செல்லும் போது உடனடியாகவும் அவரால் பதில் செய்ய முடியும். சரியான வேளைக்காய் காத்திருந்து பதில் செய்ய அவரால் முடியும். எப்படிச் சொன்னாலும் நாம் சுமந்து வருகிற சுமையாகிய பாரங்களை இலகுவாக்கவும், மாற்றிப் போடவும் ஆண்டவரால் முடியும்.

இவ்வாறு தம்முடைய பாரங்களைப் பகிர்ந்து கொண்ட இந்த வியாதிஸ்தனுக்கு சற்றும் எதிர்பாராத வித்தியாசமாக வேறுபட்ட அதிசயமான காரியத்தை கர்த்தர் செய்தார். அது என்னவென்றால் யோவான் 5:8,9 ன் படி இயேசு அவனை நோக்கி எழுந்திரு உன் படுக்கையை எடுத்துக் கொண்டு நட என்றார். உடனே அந்த மனுஷன் சொஸ்தமாகி தன் படுக்கையை எடுத்துக் கொண்டு நடந்து போனான் என்று வேதம் கூறுவதை நாம் வாசிக்கின்றோம்.

இச்செய்தியை வாசிக்கின்ற சகோதர, சகோதரிகளே இப்படிப்பட்ட ஒரு அற்புதம் எனக்கு கிடைக்குமா என்று ஒரு வேளை நாம் சிந்திக்கலாம். இயேசு கிறிஸ்து நேற்றும், இன்றும், என்றும் மாறாதவர். அவர் செய்ய நினைக்கிற காரியம் தடைபடாது. நிச்சயம் உங்கள் வாழ்விலும் ஒரு அற்புதம் நடக்கும். பல அற்புதம் செய்ய ஆண்டவரால் முடியும். அதைப் பெற்றுக் கொள்ள உங்களுடைய விசுவாசம் அவசியமாகும். ஒருவரையும் புறம்பே தள்ளாத ஆண்டவர் உங்களுடைய வருகையை எதிர்பார்த்து இருக்கின்றார். உங்களுக்கு யாருக்கும் செய்யாத புதிய அற்புதத்தை செய்ய ஆண்டவர் ஆயத்தமாய் இருக்கிறார். நீங்கள் இன்னும் ஆயத்தமாய் இல்லாமல் இருந்தால் இன்றைக்கே விசுவாசத்துடன் நீங்கள் இருக்கும் இடத்தில் ஜெபித்து உங்களுக்குரிய ஆசீர்வாதங்களை பெற்றுக் கொள்ளலாம். இன்னும் காலம் தாழ்த்த வேண்டாம். ஒரு வேளை நீங்கள் சோர்ந்து போய் இருந்தாலும், சோர்ந்து போகிறவனுக்கு திடன் கொடுக்கிற ஆண்டவர் உங்களுக்கும், உங்கள் பிள்ளைகளுக்கும், நீங்கள் செய்து கொண்டிருக்கின்ற ஊழியத்திற்கும் நிச்சயம் பதில் செய்வார். வேதத்தில் இந்த இரண்டு காரியம் மாத்திரமல்ல இன்னும் ஏராளமான அற்புதங்களை ஆண்டவர் செய்தது எழுதப்பட்டுள்ளது. எல்லாமே மனுஷன் வருத்தம் அநுபவித்தது போலவும், அதே வேளையிலே வருத்தம் அநுபவித்தவர்கள் ஜெபிக்கும் போது ஆண்டவர் செய்த அற்புதங்கள் இன்னும் அதிகமாக இருப்பதால் அதையும் வாசித்து அற்புதத்தை பெற்றுக் கொள்ளுங்கள். வருத்தத்தின் மத்தியில் கர்த்தர் அற்புதங்கள் செய்ய ஆவலாய் இருக்கின்றார்.

ஒரு முறை நான் பாடசாலையில் பணியாற்றி வீடு திரும்பும் முன்பாக என்னுடைய கால்கள் வேலை செய்ய முடியாமல் சோர்ந்து நடக்க முடியாத நிலை ஏற்பட்டது. சில மாணவர்கள் எனக்கு உதவிச் செய்து வீடு செல்வதற்கு துணை நின்றார்கள். நான் தொடர்ந்து ஜெபித்தேன் தேவன் அப்போது சுகம் கொடுத்தார். அதுமாத்திரமல்ல என்னுடைய பணி காலம் முழுவதும் மருத்துவ விடுப்பு எடுக்க வேண்டிய அவசியமே இல்லாத அளவிற்கு கர்த்தர் எனக்கு சுகத்தையும், பெலத்தையும் கொடுத்தார். அதற்காக நான் ஆண்டவருக்கு நன்றி சொல்லுகிறேன். நீங்களும் ஜெபியுங்கள், வருத்தங்கள் யாவும் ஆசீர்வாதமாக மாற தேவன் உதவிசெய்வார். ஆமென்.

சகோ. **P.D.ஞானப்பிரகாசம்,** சுரண்டை.

ஜெப எண் - 275 | ஜெப நாள்: 01-10-2024 செவ்வாய் | காலை 6.00 To மாலை 6.00 வரை.

## 12 மணி நேர உபவாச சங்கிலித் தொடர் ஜெபமும், மாதம் முழுவதும் ஜெபிக்க வேண்டிய ஜெப விண்ணப்பங்களும்

### 1. அக்டோபர் மாதத்தின் ஆசீர்வாதங்களுக்காக :

1. யாத்திராகமம் 35:33 அவனுக்கு (பெசலெயேலுக்கு) ஞானத்தையும், புத்தியையும் அறிவையும் அருளி, அவன் சகலவித வேலைகளையும் செய்யும்படி தேவ ஆவியினாலே அவனை நிரப்பினார். இப்படிப்பட்ட தேவகிருபை இம்மாதம் நம் அனைவருக்கும் தேவன் அருளவும். இதனால் நம்முடைய கடினமான காரியம் இலகுவாய் மாறவும் ஜெபிப்போம்.
2. ஏசாயா 41:14 யாக்கோபு என்னும் பூச்சியே, இஸ்ரவேலின் சிறுகூட்டமே, பயப்படாதே, நான் உனக்குத் துணை நிற்கிறேன் என்று கர்த்தரும் இஸ்ரவேலின் பரிசுத்தருமாகிய உன் மீட்பர் உரைக்கிறார். இந்த வார்த்தையை நம்பி, இம்மாதம் நமக்கு வரும் போராட்டங்களை ஜெயிக்க ஊக்கமாய் ஜெபிக்கவும், விசுவாசத்தில் உறுதியாய் நிலைத்து நிற்கவும் ஜெபிப்போம்.
3. தானியேல் 3:30 பின்பு ராஜா, சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்களை பாபிலோன் தேசத்திலே உயர்த்தினான். நமக்கு வரயிருக்கின்ற ஆவிக்குரிய ஆசீர்வாதங்களையும், உலகப் பிரகாரமான ஆசீர்வாதங்களையும் கர்த்தர் இம்மாதம் தந்தருளவும், இன்னும் நமக்கு தடைகளை கொண்டு வரும் சாத்தானின் கிரியைகள் அழிக்கப்படவும் ஸ்தோத்திரம் செலுத்தும் மாதமாக இம்மாதம் இன்னும் காணப்பட ஜெபிப்போம்.
4. II கொரிந்தியர் 12:9 அதற்கு அவர் என் கிருபை உனக்குப் போதும். பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும் என்றார். தேவன் நமக்கு இரங்கி, தமது கிருபையை இன்னும் அருளவும், இதனால் பலவீனப்படும் நேரமெல்லாம் நமக்கு தேவன் பெலனாக மாறவும், இதுவரை நடக்காத அற்புத அடையாளங்கள் நமக்கு நடக்கவும், ஓர் எழுப்புதல் உண்டாகவும் ஜெபிப்போம்.
5. வெளி.1:10 கர்த்தருடைய நாளில் ஆவிக்குள்ளானேன். அப்பொழுது எனக்குப் பின்னால் எக்காள சத்தம் போன்ற பெரிதான ஒரு சத்தத்தைக் கேட்டேன். திவ்ய வாசகனாகிய யோவானுக்கு கிடைத்த இந்த ஆவிக்குரிய அனுபவங்கள் யாவும் இம்மாதம் கிடைக்கவும், கர்த்தர் நம்மை பயன்படுத்தவும் ஜெபிப்போம்.
6. பிரசங்கி 5:2 தேவன் வானத்திலிருக்கிறார். நீ பூமியிலிருக்கிறாய். ஆதலால் உன் வார்த்தைகள் சுருக்கமாய் இருப்பதாக. நாம் பேசும் வார்த்தைகளைக் குறித்து கவனமாய் இருக்க வேண்டும். அதிகமான தேவையற்ற வார்த்தைகளைப் பேசாமல் இருக்க இன்னும் அதிகம் ஜெபிப்போம்.

### 2. இந்தியா இயேசுவின் ஆசீர்வாதத்தினால் நிரப்பப்பட :

1. ஏசாயா 45:23 முழங்கால் யாவும் எனக்கு முன்பாக முடங்கும். இந்த ஜீவ வார்த்தையானது சீக்கிரமாய் இந்தியாவில் நிறைவேறவும், இதனால் தேசம் சமாதானம் பெற்று, ஜனங்கள் மத்தியில் ஞான எழுப்புதல் உண்டாகவும், ஜனங்கள் ஒருவருக்கொருவர் சமாதான வாழ்த்துதல் சொல்லும் நாட்கள் சீக்கிரம் வரவும் ஜெபிப்போம்.
2. சங்கீதம் 145:14 கர்த்தர் விழுகிற யாவரையும் தாங்கி, மடங்கடிக்கப்பட்ட யாவரையும் தூக்கி விடுகிறார். பல்வேறு பிரச்சனைகளால் விழுந்து போன தேசத்தலைவர்களை கர்த்தர் தாங்கவும், மடங்கடிக்கப்பட்ட தலைவர்களையும் தூக்கிவிடவும், இனி இப்படிப்பட்ட சூழ்நிலை தலைவர்களுக்கு உண்டாகாமல் இருக்கவும் ஜெபிப்போம்.
3. யோபு 42:12 கர்த்தர் யோபுவின் முன்னிலைமையைப் பார்க்கிலும் அவன் பின்னிலைமையை ஆசீர்வதித்தார். தேவனை ஏற்றுக்கொண்ட நம் தேசத்தின் ஜனங்கள் முன்னிலைமையைப் பார்க்கிலும் அவர்களது பின்னிலைமை ஆசீர்வதிக்கப்படவும், இதற்குத் தடையாய் உள்ள சூழ்நிலை மாறவும், இந்த ஆசீர்வாதம் நம் தேசத்தில்கடந்து வர ஜெபிப்போம்.
4. மத்தேயு 24:3 சீடர்கள் இயேசுவிடம் தனித்து வந்து இவைகள் எப்பொழுது சம்பவிக்கும்? எங்களுக்கு சொல்ல வேண்டும் என்றார்கள். சீடர்கள் இயேசுவிடம் வந்து அனேகக் காரியங்களைக் கேட்டது போல, இந்திய ஜனங்கள் இயேசுவிடம் வந்து, தங்கள் சந்தேகங்களை கேட்டு தெரிந்து கொள்ளவும், இந்த வாஞ்சை விரைவில் உண்டாகவும் ஜெபிப்போம்.
5. மாற்கு 13:37 நான் உங்களுக்குச் சொல்லுகிறதை எல்லோருக்கும் சொல்லுகிறேன். விழித்திருங்கள் என்றார். இந்திய தேசத்திற்கு எதிராக அண்டை நாடுகள் மூலமாய் எழும்பும் பயங்கரமான சூழ்நிலை மாறவும், இந்திய மக்கள் ஜெபத்தில் உறுதியாய்த் தரித்திருந்து பக்கத்து நாடுகளின் தாக்குதலை ஜெபத்திலே ஜெயிக்க ஜெபிப்போம்.
6. அப். 9:6 நீ எழுந்து பட்டணத்திற்குள்ளே போ. நீ செய்யவேண்டியது அங்கே உனக்குச் சொல்லப்படும். பவுல் ஆரம்பத்திலேயே இந்த ஆவியானவரின் வழி நடத்துதலை பெற்றுக் கொண்டது போல, நம் தேசத் தலைவர்கள் ஆண்டவருக்குள் வரவும், ஆரம்பதிலேயே பவுலின் அனுபவத்தைப் பெற்றுக் கொள்ளவும், அதில் நிலைத்திருக்கவும் ஜெபிப்போம்.
7. ரோமர் 9:28 கர்த்தர் பூமியிலே சீக்கிரமாய் காரியத்தை நிறைவேற்றி முடிப்பார். கர்த்தர் செய்யவேண்டிய கிரியை யாவும் நம் தேசத்தில் சீக்கிரமாய் நிறைவேற ஜெபிப்போம்.

## 3. நமக்கு எதிராய் உருவாகும் ஆயுதங்கள் வாய்க்காமல் போக:

1. நெகேமியா 4:3 அப்பொழுது அம்மோனியனாகிய தொபியா அவன் பக்கத்தில் நின்று, அவர்கள் கட்டினாலும் என்ன ஒரு நரி ஏறிப்போனால் அவர்களுடைய கல் மதில் இடிந்து போகும் என்றான். நெகேமியாவுக்கு எதிராய் அலங்கம் கட்ட முடியாதபடி உருவாகின ஆயுதம் வாய்க்காமல் போனது போல, நம் திட்டங்களை எதிர்க்கும் எதிராளிகள் தோல்வியடைய ஜெபிப்போம்.
2. ஆதியாகமம் 43:26 யோசேப்பு வீட்டுக்கு வந்தபோது, அவர்கள் தங்கள் கையில் இருந்த காணிக்கையை வீட்டுக்குள் அவனிடத்தில் கொண்டு போய் வைத்து, தரை மட்டும் குனிந்து அவனை வணங்கினார்கள். யோசேப்பிற்கு விரோதமாய் அவன் சகோதரர்களால் உருவாக்கப்பட்ட ஆயுதம் வாய்க்காமல் போனது போல, நமக்கும் நடைபெற ஜெபிப்போம்.
3. யாத்திராகமம் 9:11 அந்தக் கொப்புளங்கள் மந்திரவாதிகள் மேலும் எகிப்தியர் எல்லார் மேலும் உண்டானதினால் கொப்புளங்கள் நிமித்தம் மந்திரவாதிகளும், மோசேக்கு முன்பாக நிற்கக் கூடாதிருந்தது. மந்திரவாதிகளும் மோசேயை ஜெயிக்க முடியாதபடி போனது போல, நமக்கும் எந்தவிதமான பிசாசின் கிரியைகளும் நம்மை மேற்கொள்ளாதபடி போகவும் ஜெபிப்போம்.
4. II நாளாகமம்20:22 அவர்கள் பாடித் துதி செய்யத் தொடங்கினபோது, யூதாவுக்கு விரோதமாய் வந்து பதிவிருந்து அம்மோன் புத்திரரையும், மோவாபியரையும், சேயீர் மலைத் தேசத்தாரையும் ஒருவருக்கு விரோதமாய் ஒருவரை கர்த்தர் எழும்பப் பண்ணினதினால் அவர்கள் வெட்டுண்டு விழுந்தார்கள். கர்த்தர் நம் யாவருக்கும் இப்படிச் செய்து, நம்மை வழிநடத்த ஜெபிப்போம்.
5. அப். 12:19 அவர்கள் முதலாங்காவலையும், இரண்டாம் காவலையும் கடந்து, நகரத்திற்கு போகிற இருப்புக் கதவண்டையிலே வந்தபோது, அது தானாய் அவர்களுக்கு திறவுண்டது. அப்போஸ்தலர் கால இப்படிப்பட்ட அற்புதங்கள் நம் வாழ்க்கையிலும், ஊழியத்திலும் கர்த்தர் செய்யவும், இதற்குரிய ஊக்கமான ஜெபங்கள் நம்மிடம் காணப்படவும் ஜெபிப்போம்.
6. தானியேல் 3:25 அதற்கு அவன், இதோ நாலுபேர் விடுதலையாய் அக்கினியின் நடுவிலே உலாவுகிறதைக் காண்கிறேன். அவர்களுக்கு ஒரு சேதமுமில்லை. நாலாம் நபரின் சாயல் தேவபுத்திரனுக்கு ஒப்பாய் இருக்கிறது என்றான். நம்முடைய ஊழியத்திலும் இப்படிப்பட்ட தேவகிரியைகள் இன்றே நடைபெறவும், எழுப்புதல் உண்டாகி, எதிர்ப்புகள் மறையவும் ஜெபிப்போம்.
7. I சாமுவேல் 17:50 தாவீது ஒரு கவணினாலும், ஒரு கல்லினாலும் பெலிஸ்தனை மேற்கொண்டு... தேவன் நம் வாழ்விலும் இப்படி கிரியை செய்ய ஜெபிப்போம்.

## 4. எழுப்புதல் ஜெப ஐக்கியத்தில் ஆவியானவர் பலமாய் கிரியை செய்ய:

1. II சாமுவேல் 6:11 கர்த்தருடைய பெட்டி, கித்தியனாகிய ஓபேத்ஏதோமின் வீட்டிலே மூன்று மாதம் இருக்கையில் கர்த்தர் ஓபேத் ஏதோமையும் அவன் வீட்டார் அனைவரையும் ஆசீர்வதித்தார். சுரண்டையை மையமாய் வைத்து செயல்படும் நம் ஐக்கியம் அனைவருக்கும், குறிப்பாக அனைத்து சபைக்கும் ஆசீர்வாதமாய் மாற ஜெபிப்போம்.
2. எசேக்கியேல் 37:14 என் ஆவியை உங்களுக்குள் வைப்பேன். நீங்கள் உயிரடைவீர்கள். கர்த்தருடைய ஆவி இன்னும் பலமாய் ஐக்கிய ஊழியத்தில் இறங்கவும், அற்புத அடையாளங்கள் ஏராளம் நடைபெற்று, இதுவரையில்லாத தேவனின் கிரியைகள் தினமும் ஐக்கியத்தில் நடைபெற்று, திரளான ஆத்துமாக்கள் தேவ ராஜ்யத்தில் சேர்க்கப்படவும் ஜெபிப்போம்.
3. மத்தேயு 11:29 நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன். என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக் கொள்ளுங்கள். நம் ஐக்கியத்திற்கு இயேசுவே சகல சத்தியத்தையும் இன்னும் கற்றுத் தரவும், அதன்படி நடக்கவும், இதனால் ஊழியத்தின் எல்லைகள் விரிவடையவும், ஜனங்கள் ஆசீர்வதிக்கப்படவும் ஜெபிப்போம்.
4. அப்போஸ்தலர் 16:18 இப்படி அநேக நாள் செய்து கொண்டு வந்தாள். பவுல் சினங்கொண்டு திரும்பிப் பார்த்து, நீ இவளை விட்டுப் புறப்படும்படி இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உனக்கு கட்டளையிடுகிறேன் என்று அந்த ஆவியுடனே சொன்னார். அந்நேரமே அது புறப்பட்டுப் போயிற்று. இப்படிப்பட்ட ஆவியின் நிதானம் ஐக்கியத்தில் காணப்பட ஜெபிப்போம்.
5. I கொரிந்தியர் 14:40 சகலமும் நல்லொழுக்கமாயும், கிரமமாயும் செய்யப்படக்கடவது. இந்த வசனத்தின்படி, ஐக்கியமும், ஐக்கியத்தின் குடும்பங்களும், ஊழியமும் இன்னும் சுத்தமாய் காணப்படவும், ஊழியர்களுக்கு இதற்குத் தேவையான ஞானத்தின் ஆவி எப்போதும் கிடைக்கவும், இன்னும் ஒருமனப்பட்டு ஆவி ஐக்கியத்தின் பிள்ளைகளுக்கு காணப்பட ஜெபிப்போம்.
6. எபிரெயர் 13:18 எங்களுக்காக வேண்டிக் கொள்ளுங்கள். நாங்கள் நல்மனச்சாட்சி உள்ளவர்களாய் எல்லாவற்றிலும் யோக்கியமாய் நடக்க விரும்புகிறோமென்று நிச்சயத்திருக்கிறோம். இவ்வசனத்தின்படி ஐக்கியம் நடைபெறவும், ஐக்கியத்தை ஜெபித்துத் தாங்குவோர் திரளானபேரை கர்த்தரே எழுப்பவும் ஜெபிப்போம்.

அக்டோபர் 2024

## தினமும் வேதத்தின் மகத்துவங்களைத் தியானித்து, ஜெபியுங்கள்.

01.10.24 செவ்வாய் : தானியேல் 1:17 இந்த நாலு வாலிபருக்கும் தேவன் சகல எழுத்திலும், ஞானத்திலும், அறிவையும் சாமர்த்தியத்தையும் கொடுத்தார்; தானியேலைச் சகல தரிசனங்களையும், சொப்பனங்களையும் அறியத்தக்க அறிவுள்ளவனாக்கினார். இப்படிப்பட்ட தேவ ஞானத்தை அனைவருக்கும் தந்தருளி இம்மாதத்தில் வரக்கூடிய சோதனைகள் அனைத்தையும் நமக்கு ஜெயமாக்கித் தந்து குறிப்பாக தானியேலுக்குள் இருந்த விசேஷித்த அறிவையும், தைரியத்தையும், பெலத்தையும் தேவன் நமக்கு கட்டளையிடுவார்.

02.10.24 புதன் : ஓசியா 8:12 என் வேதத்தின் மகத்துவங்களை அவர்களுக்கு எழுதிக்கொடுத்தேன்; அவைகளை அந்நியகாரியமாக எண்ணினார்கள். வேதத்தின் மகத்துவங்களை புரியாதவர்கள் இம்மாதத்திலிருந்து நன்றாக புரிந்து கொள்ளவும், அப்படி புரிந்துகொண்டவர்கள் பரிசுத்த ஆவியானவரால் வழி நடத்தப்படவும், மரியாள் போல தேவ சமூகத்தில் காத்திருந்து வசனத்தைக் கேட்கவும், கேட்ட வசனத்தின்படி ஜெபிக்கவும் தேவன் கிருபை செய்வார். நம் மூலம் வேத மகத்துவங்கள் இன்னும் வெளிப்படும்.

03.10.24 வியாழன் : யோவேல் 2:31 கர்த்தருடைய பெரிதும் பயங்கரமுமான நாள் வருமுன்னே சூரியன் இருளாகவும், சந்திரன் இரத்தமாகவும் மாறும். இந்த வசனத்தின்படி ஆண்டவர் செய்யப் போகிறபடியால் ஜனங்களை தேவனை சந்திக்கவும், வருகைக்கு ஆயத்தப்படுத்தவும் ஜெபிக்க கடமைப்பட்டுள்ளோம். யோவேலின் தீர்க்கத்தரிசனம் சீக்கிரம் நிறைவேறப்போகிறபடியால் நாம் எல்லாரும் கர்த்தருடைய வருகைக்கு இன்னும் ஆயத்தப்படவும், அநேகரை ஆயத்தப்படுத்தவும் கடமைப்பட்டுள்ளோம்.

04.10.24 வெள்ளி : ஆமோஸ் 9:12 அந்நாளிலே விழுந்துபோன தாவீதின் கூடாரத்தை நான் திரும்ப எடுப்பித்து, அதின் திறப்புகளை அடைத்து, அதில் பழுதாய்போனதைச் சீர்ப்படுத்தி, பூர்வநாட்களில் இருந்ததுபோல அதை ஸ்தாபிப்பேன் என்று இதைச் செய்கிற கர்த்தர் சொல்கிறார். விழுந்து போன பேதுருவை மீண்டும் கர்த்தர் எழுப்பி பயன்படுத்தினதுப்போல நம் அனைவரையும் மீண்டும் ஆண்டவர் புதுப்பித்து தன் சித்தப்படி பயன்படுத்துவார். நம் அனைவரையும் ஆண்டவர் மீண்டும் உபயோகப்படுத்துவார்.

05.10.24 சனி : ஒபதியா 1:21 ஏசாவின் பர்வதத்தை நியாயந்தீர்ப்பதற்காக இரட்சகர்கள் சீயோன் பர்வதத்தில் வந்தேறுவார்கள்; அப்பொழுது ராஜ்யம் கர்த்தருடையதாய் இருக்கும். உலகில் உள்ள அத்தனை தேசங்களும் கர்த்தரிடமாய் திரும்ப வேண்டும். அப்போது இந்த ராஜ்யம் கர்த்தருடையதாய் மாறும். நமக்கு தெரிந்த ராஜ்யங்கள் அனைத்தையும் கர்த்தர் ஆளுகை செய்யவும். தடைகளை நீக்கவும், நினிவே பட்டணம் தேவ ராஜ்யமாய் மாறினதுபோல சீக்கிரம் ஒரு மாற்றம் ஏற்படவும் கர்த்தர் நம்மை பயன்படுத்துவார்.

06.10.24 ஞாயிறு : யோனா 1:12 அதற்கு அவன்: நீங்கள் என்னை எடுத்துச் சமுத்திரத்திலே போட்டு விடுங்கள்; அப்பொழுது சமுத்திரம் உங்களுக்கு அமர்ந்திருக்கும் ; என்னிமித்தம் இந்தப் பெரிய கொந்தளிப்பு உங்கள்மேல் வந்ததென்பதை நான் அறிவேன் என்றான். யோனா சென்ற கப்பலில் ஏற்பட்ட குழப்பத்தையும், அதனுடைய காரியங்களையும் யோனா தெரிந்து கொண்டது போல, நம் மூலமாகவும் ஏற்பட்ட குழப்பங்களை நாம் கண்டறிந்து அதற்காக தேவனிடம் மனஸ்தாபப்படும் போது யோனாவிற்கு இரங்கினது போல, நமக்கும் தேவன் இரக்கம் செய்வார்.

07.10.24 திங்கள் : மீகா 7:5 சிநேகிதனை விசுவாசிக்கவேண்டாம், வழிகாட்டியை நம்பவேண்டாம். கர்த்தர் ஒருவரே நமக்கு வழிகாட்டியாய் இருக்க வேண்டும். அப்போஸ்தலர்கள் அப்படி நம்பிக்கையோடு வாழ்ந்ததால் எல்லா பிரச்சனைகளையும் அவர்களால் தீர்த்துக் கொள்ள முடிந்தது. நாம் அநேக பிரச்சனையோடு இருந்தாலும் கர்த்தரை மட்டும் நாள்தோறும் நாம் விசுவாசித்து அவரை மட்டும் நம்முடைய வழிகாட்டியாக வாழுவோம். நம்முடைய ஊழியமும், குடும்பமும் இன்னும் செழிக்கும்.

08.10.24 செவ்வாய் : நாகூம் 3:13 இதோ, உன் நடுவில் இருக்கிற ஜனங்கள் பேடிகள்; உன் தேசத்தின் வாசல்கள் உன் சத்துருவுக்குமுன் திறவுண்டுபோகும்; அக்கினி உன் தாழ்ப்பாள்களைப் பட்சிக்கும். நம் மத்தியில் குடியிருக்கிற ஜனங்களைக் குறித்தும் நாம் கவனமுள்ளவர்களாக இருக்கும் போது, நம் மூலமாக கர்த்தர் அவர்களை இரட்சிப்பார். இதற்காக நாம் ஜெபிக்க வேண்டும். தேவன் கிரியைச் செய்வார். மீண்டும் ஒரு அப்போஸ்தலர் நாட்களை நாம் விரைவில் காண வேண்டும். இதற்காகவும் நாம் அழைக்கப்பட்டுள்ளோம்.

09.10.24 புதன் : ஆபகூக் 3:13 உமது ஜனத்தின் இரட்சிப்புக்காகவும் நீர் அபிஷேகம் பண்ணுவித்தவனின் இரட்சிப்புக்காகவுமே நீர் புறப்பட்டீர். நம்மை இரட்சித்து, அபிஷேகித்த ஆண்டவர் நம்மை கைவிடுகிறது இல்லை. நமக்காக சாத்தானுடைய திட்டங்களுக்கு விரோதமாக போராடுவார். நமக்கு நிச்சயம் வெற்றிகிடைக்கும். சீஷர்கள் பல வழியில் சோர்ந்து போனாலும் ஆண்டவர் அவர்களுக்காக வழக்காடி அவர்களுக்கு ஊழியத்தில் ஜெயத்தை கட்டளையிட்டதுபோல நமக்கும் செய்வார். நாம் இன்னும் தைரியமாய் இருப்போம்.

10.10.24 வியாழன் : செப்பனியா 1:2 தேசத்தில் உண்டானதை எல்லாம் முற்றிலும் வாரிக்கொள்ளுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். தேசம் முழுவதையும் ஆண்டவரின் ஆளுகை வரயிருக்கிறப்படியால் நாம் விசுவாசத்தோடு தேவனால் பயன்படுத்தப்பட அழைக்கப்பட்டுள்ளோம். ஒரு நாகமான் குஷ்டரோகி சுகமடைந்து அவர் மூலமாக சீரியா தேசமே இரட்சிக்கப்பட்டது போல நம் அனைவர் மூலமாகவும் தேவன் தமது இரட்சிப்பை வெளிப்படுத்துவார். இந்த நாள் வரும்வரைக்கும் நாம் விசுவாசத்துடனும், பொறுமையுடனும் ஜெபிப்போம்.

11.10.24 வெள்ளி : ஆகாய் 1:6 நீங்கள் திரளாய் விதைத்தும் கொஞ்சமாய் அறுத்துக்கொண்டுவருகிறீர்கள்; நீங்கள் புசித்தும் திருப்தியாகவில்லை; குடித்தும் பரிபூரணமடையவில்லை. நாம் அனைவரும் கர்த்தருக்குள் நிலைத்திருக்க வேண்டும். அவ்விதமாக வாழாவிட்டால் நாம் எதைச் செய்தாலும் பரிபூரண ஆசீர்வாதத்தை காண முடியாது. மரியாள் பூரண ஆசீர்வாதத்தை பெற்றுக்கொண்டதை போல, மார்த்தாளுக்கு தேவ ஆசீர்வாதம் கிடைக்கவில்லை. நாம் மார்த்தாளை போல அல்ல, மரியாளைப் போல வாழ்வோம்.

12.10.24 சனி : சகரியா 6:1 நான் திரும்பவும் என் கண்களை ஏறெடுத்து, இதோ, இரண்டு பர்வதங்களின் நடுவாகப் புறப்பட்டுவருகிற நாலு இரதங்களைக் கண்டேன்; அந்தப் பர்வதங்கள் வெண்கலப் பர்வதங்களாயிருந்தன. தேவனை நாம் ஒருமுறை அல்ல பலமுறை நம் கண்களை ஏறெடுத்துப் பார்க்க வேண்டும். அப்போது கர்த்தரின் செயல்களை நாம் காண முடியும். பவுல் அப்போஸ்தலர் பலமுறை ஜெபிக்கும் போது ஒவ்வொரு முறையும் புதிய புதிய வழிநடத்துதல்களை தேவனிடம் பெற்றுக்கொண்டார்கள்.

13.10.24 ஞாயிறு : மல்கியா 1:2 நான் உங்களைச் சிநேகித்தேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்; அதற்கு நீங்கள்; எங்களை எப்படிச் சிநேகித்தீர் என்கிறீர்கள்; கர்த்தர் சொல்லுகிறார்; ஏசா யாக்கோபுக்குச் சகோதரன் அல்லவோ? ஆகிலும் யாக்கோபை நான் சிநேகித்தேன். யாக்கோபை சிநேகித்த தேவன் நம்மையும், நம்முடைய பிள்ளைகளையும் இன்னும் அதிகமாக சிநேகிக்க வேண்டும். யாக்கோபை போல நாம் போராடி ஜெபிக்கும் போது கர்த்தர் நம்மையும் சிநேகிப்பதையும் காண முடியும். தொடர்ந்து ஜெபிப்போம்

14.10.24 திங்கள் : மத்தேயு 3:2 மனந்திரும்புங்கள், பரலோகராஜ்யம் சமீபத்திருக்கிறது என்று பிரசங்கம் பண்ணினான். இந்த நாட்களில் அவசியமான செய்தி என்னவென்றால் எல்லாரும் மனந்திரும்ப வேண்டும் என்பதே. இந்தச்செய்தியை யோவான்ஸ்நானன் சொல்லும்போது திரளான ஜனங்கள் மனந்திரும்பி ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டார்கள். அது போல நம்முடைய ஊழியத்திலும் தேவன் இதைப்போல கிரியைச் செய்வார். நம்முடைய மனந்திரும்புதலைக் குறித்தும் அநேகருக்கு சாட்சி கூற வேண்டும்.

15.10.24 செவ்வாய் : மாற்கு 5:26 அநேக வைத்தியர்களால் மிகவும் வருத்தப்பட்டு, தனக்கு உண்டானவைகளையெல்லாம் செலவழித்தும், சற்றாகிலும் குணமடையாமல் அதிக வருத்தப்படுகிறபொழுது... பெரும்பாடுள்ள ஸ்திரீ இயேசுவின் வஸ்திரத்தை தொட்டப்போது சுகம் பெற்றதுப்போல இப்படிப்பட்ட நிலையில் உள்ள ஜனங்கள் இன்னும் காலம் தாழ்த்தாமல் இயேசுவிடம் ஓடி வந்து பூரண சுகம் பெற்றுக்கொள்ள அநேகருக்கு நாம் வழிகாட்ட வேண்டும். இயேசு அவர்களை சுகமாக்குவார்.

16.10.24 புதன் : லூக்கா 6:46 என்னை ஆண்டவரே ஆண்டவரே என்று நீங்கள் சொல்லியும், நான் சொல்லுகிறபடி நீங்கள் செய்யாமற்போகிறதென்ன?... தேவ வார்த்தையை பெற்றுக்கொண்ட சவுல் ராஜா தேவ வார்த்தைக்கு கீழ்ப்படியாமல் போனப்படியால் ராஜ்யபாரத்தை இழந்தார். இதைப்போல நாம் நடக்காமல் கர்த்தர் என்ன சொல்லுகிறாரோ அதற்கு மனப்பூர்வமாய் கீழ்ப்படிந்து நடப்போமென்றால் கர்த்தர் இன்னும் நம்மை உயர்த்துவார். நாம் பெற்றுக் கொண்ட ஆசீர்வாதங்கள் ஏராளம் தேவனிடம் உண்டு.

17.10.24 வியாழன் : யோவான் 6:63 ஆவியே உயிர்ப்பிக்கிறது, மாம்சமானது ஒன்றுக்கும் உதவாது; நான் உங்களுக்கு சொல்லுகிற வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது. தேவ வார்த்தைக்கு நாம் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். ஏனென்றால் தேவனுடைய வார்த்தையில் ஜீவன் இருக்கின்றது. நாம் பெற்றுக் கொண்ட வாக்குத்தத்தங்கள் எல்லாம் நிச்சயம் நிறைவேறும். ஒரு வேளை காலதாமதம் போல நமக்கு தெரிந்தாலும், பேதுருவுக்கு தேவன் சொன்ன வார்த்தை நிறைவேறினது போல நமக்கும் நிறைவேறும்.

18.10.24 வெள்ளி : அப்போஸ்தலர் 12:5 அப்படியே பேதுரு சிறைச்சாலையிலே காக்கப்பட்டிருக்கையில் சபையார் அவனுக்காக தேவனை நோக்கி ஊக்கத்தோடே ஜெபம் பண்ணினார்கள். சபையாரின் இந்த ஜெபம் கேட்கப்பட்டு பேதுரு விடுதலையடைந்தது போல, நம் அனைவரின் ஜெபமும் நிச்சயம் கேட்கப்படும். சோர்ந்து போகாமல் நாம் வழக்கமாக ஜெபிக்கிற இடத்தில் ஜெபிக்க வருகிறவர்களை வைத்து தொடர்ந்து ஜெபித்தால் சிறைச்சாலையின் கதவுகள் தானாக திறக்கப்பட்டது போல பெரிய மாற்றத்தை நாம் எதிர்பார்க்கலாம்.

19.10.24 சனி : ரோமர் 1:21 அவர்கள் தேவனை அறிந்தும், அவரை தேவனென்று மகிமைப்படுத்தாமலும், ஸ்தோத்திரியாமலுமிருந்து, தங்கள் சிந்தனைகளினாலே வீணரானார்கள்; உணர்வில்லாத அவர்களுடைய இருதயம் இருளடைந்தது. நாம் தேவனை நன்றாக ஸ்தோத்தரிக்கும் போது நம்முடைய இருதயம் அனலடையும். சுகமடைந்த பத்து குஷ்டரோகிகளில் நன்றி சொன்னவரின் இருதயம் அனலடைந்தது. நன்றி சொல்லாதவர்களின் இருதயம் இருளடைந்தது. நாம் நன்றி சொல்ல எப்போதும் ஆயத்தமாயிருக்க வேண்டும்

20.10.24 ஞாயிறு : I கொரிந்தியர் 1:31 அவரே தேவனால் நமக்கு ஞானமும், நீதியும் பரிசுத்தமும் மீட்புமானார். நாம் எவ்வளவு காலம் ஊழியம் செய்தாலும் இன்னும் நமக்கு ஞானம், நீதி, பரிசுத்தம், மீட்பு ஆகியவை இன்னும் தேவையானது. ஏனென்றால் போராட்டமான உலகத்திலே நாம் வாழ்ந்து வருகிறோம். பழைய அனுபவங்கள் அல்ல, புதிய அனுபவங்களை கர்த்தர் நமக்கு தர ஜெபிக்க வேண்டும். அப்போஸ்தலர்கள் கூடி ஜெபித்த போது புதிய கிருபையால் அவர்கள் நிரப்பப்பட்டார்கள். ஸ்தேவான் இந்த கிருபையிலே நிறைந்திருந்தான்.

21.10.24 திங்கள் : II கொரிந்தியர் 4:1 இப்படிப்பட்ட ஊழியத்தை உடையவர்களாகிய நாங்கள் இரக்கம் பெற்றிருப்பதால் சோர்ந்துபோகிறதில்லை. நாம் தேவ கிருபையை பெற்றுக்கொள்ளுவதற்கு ஊழியம் செய்வதும் ஒரு காரணமாகும். நீங்கள் ஒரு வேளை ஊழியம் செய்யாமல் இருந்தால், ஜெபத்துடன் செய்ய தொடங்குங்கள். ஊழியர்கள் தொடர்ந்து செய்யுங்கள். அப்போது கர்த்தர் உங்களோடுக்கூட இருந்து கிரியைச் செய்வார். நீங்கள் செய்த ஊழியத்தை உங்கள் பிள்ளைகளும், தீமோத்தேயு போல செய்வார்கள்.

22.10.24 செவ்வாய் : கலாத்தியர் 2:10 தரித்திரரை நினைத்துக்கொள்ளும்படிக்குமாத்திரம் சொன்னார்கள்; அப்படிச் செய்யும்படி அதற்கு முன்னமே நானும் கருத்துள்ளவனாயிருந்தேன். வாழ்க்கையில் ஒரு பகுதி தரித்திரருக்கு உதவி செய்தலாகும். அவர்களுக்கு சுவிசேஷம் அறிவித்து நம்மால் இயன்ற உதவிகளை அவர்களுக்கு செய்ய வேண்டும். நல்ல சமாரியன் உதவி செய்தது போல நம்மிடம் இல்லையென்று எதையும் சொல்லாமல் இருக்கிறதை கொடுப்போமானால், நம்முடைய வாழ்க்கையில் வளர்ச்சி உண்டாகும்.

23.10.24 புதன் : எபேசியர் 4:27 பிசாசுக்கு இடங்கொடாமலும் இருங்கள். தாவீது தேவ ஆவி பெற்றவராக இருந்தாலும் தன்னிடம் பிசாசானவன் சோதிக்கும்போது ஜனத்தொகையை கணக்கிட பிசாசால் தூண்டப்பட்டார். இதனால் அவர் பல்வேறு இழப்புகளை சந்தித்தார். நாம் இதைப்போல பிசாசு சோதிக்க இடங்கொடுக்கக் கூடாது . எப்போதும் ஆவிக்குள் ஜெபித்திருப்போமானால் மனிதர்கள் சத்தத்தையும், சாத்தானுடைய சத்தத்தையும் நம்மால் அறிந்துக் கொள்ள முடியும். எப்படி வாழலாம் என்று ஆவியானவர் நம்மோடு தினமும் பேசுவார்.

24.10.24 வியாழன் : பிலிப்பியர் 2:5 கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது. கிறிஸ்து இயேசுவின் சிந்தை எப்போதும் தேவ ராஜ்ஜியமாகவே இருந்தது. அவர் உலகத்தில் வாழ்ந்தாலும், உலகப்பிரகாரமான சிந்தைகள் இல்லாமல் இருந்ததுபோல நாம் வாழ வேண்டும். அப்போது தேவ ராஜ்ஜியம் நமக்குள் கட்டப்படும். இயேசுவும் தம்முடைய சீஷர்களுக்கு இந்தச் சிந்தைகளையே கற்றுக் கொடுத்தார். அவர்கள் உலகமெங்கும் போய் சர்வசிருஷ்டிக்கும் சுவிசேஷத்தை பிரசங்கித்தார்கள்.

25.10.24 வெள்ளி : கொலோசெயர் 1:9 நீங்கள் எல்லா ஞானத்தோடும், ஆவிக்குரிய விவேகத்தோடும் அவருடைய சித்தத்தை அறிகிற அறிவினாலே நிரப்பப்படவும். வேதத்தில் உள்ள நிருபங்களை வாசித்துப் பார்க்கும் போது விசுவாசிகளுக்கும், ஊழியர்களுக்கும் ஏற்ற ஆலோசனைகள் ஏராளமாக சொல்லப்பட்டிருக்கின்றது. அவைகளை வாசித்து ஜெபிக்கும் போது நாம் கர்த்தருக்குள் நிலைத்திருக்க முடியும். சாமுவேல் தீர்க்கத்தரிசி போல தேவன் சொல்லும் வார்த்தைகளையும் நாம் கவனிக்க வேண்டும்.

26.10.24 சனி : I தெசலோனிக்கேயர் 2:20 நீங்களே எங்களுக்கு மகிமையும் சந்தோஷமாயிருக்கிறீர்கள். ஊழியர்கள் தங்களால் உருவாக்கப்பட்ட விசுவாசிகளை தங்களுக்கு மகிமையாகவும், சந்தோஷமாகவும் எண்ணி நடத்த வேண்டும். அப்போது அந்த விசுவாசிகள் இயேசுவை நேசிக்கிறது போல ஊழியர்களையும் நேசிப்பார்கள். இந்த அடிப்படையில் நம்முடைய ஊழியம் அமையுமானால் வரும் நாட்களில் ஊழிய வளர்ச்சியையும் நாம் எதிர்பார்க்கலாம். நிருபங்களில் உள்ள ஊழியர்களே இதற்கு சாட்சியாகும்.

27.10.24 ஞாயிறு : II தெசலோனிக்கேயர் 3:12 இப்படிப்பட்டவர்கள் அமைதலோடே வேலைசெய்து, தங்கள் சொந்தச் சாப்பாட்டைச் சாப்பிடவேண்டுமென்று, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலே அவர்களுக்குக் கட்டளையிட்டுப் புத்தி சொல்லுகிறோம். இப்படிப்பட்ட ஆலோசனைகள் ஊழியர்களுக்கு அவசியமாகும். இப்படி வாழ்ந்தால் நம்முடைய சாட்சி இன்னும் அதிகமாக வளரும். சொந்த குடும்பத்தை நன்றாய் நடத்துங்கள் என்று பவுல் நிருபங்களில் விசுவாசிகளுக்காக அதிகமாக எழுதியுள்ளார்.

28.10.24 திங்கள் : I தீமோத்தேயு 3:1 கண்காணிப்பை விரும்புகிறவன் நல்ல வேலையை விரும்புகிறான். இது உண்மையான வார்த்தை. உலகில் உள்ள வேலைகளில் பிரதானமான வேலை தேவனுக்காக கண்காணிப்பு வேலையைச் செய்வதேயாகும். நாம் உண்மையாய் கர்த்தருக்கு ஊழியம் செய்தால் கர்த்தர் நம் அனைவரையும் உண்மையாய் காத்துக் கொள்வார். எலியாவின் நாட்களில் எலியாவை போஷிக்க தேவன் காகங்களை அனுப்பின சம்பவம் நமக்கு இன்றும் ஆசீர்வாதமாக இருக்கின்றது. எவ்விதத்திலும் தேவன் நம்மை நடத்துவார்.

29.10.24 செவ்வாய் : II தீமோத்தேயு 3:1 மேலும், கடைசிநாட்களில் கொடிய காலங்கள் வருமென்று அறிவாயாக. நாம் வாழும் இந்த வாழ்க்கையில் நடந்த சம்பவங்கள் காணும் போது இது கடைசிநாட்கள் என்பதை நம்மால் புரிய முடிகிறது. எந்த அளவு நாம் பரிசுத்தமாய் வாழ முடியுமோ, அவ்வளவாய் பரிசுத்தமாய் வாழ தேவனுக்காக ஊழியம் செய்ய நாம் அழைக்கப்பட்டுள்ளோம். இனி வரும் நாட்களில் தேவன் நம்மை தமது ஆவியால் நிரப்பி நம் மூலம் அற்புதங்களை செய்வார். ஆண்டவர் நம் மூலம் கிரியை செய்ய ஜெபிப்போம்.

30.10.24 புதன் : தீத்து 1:11 அவர்களுடைய வாயை அடக்க வேண்டும்; அவர்கள் இழிவான ஆதாயத்துக்காகத் தகாதவைகளை உபதேசித்து, முழுக்குடும்பங்களையும் கவிழ்த்துப்போடுகிறார்கள். நாம் சார்ந்து வாழும் நம்முடைய சொந்த குடும்பங்களை, பிள்ளைகளை நன்றாய் நடத்த நம்முடைய வாயின் வார்த்தைகள் சுருக்கமாக இருக்க வேண்டும். வேதத்தின் வெளிச்சத்திலே நம்முடைய பிள்ளைகளை நடத்தும் போது நம் காலத்திலேயே நம்முடைய பிள்ளைகளை கர்த்தர் வழிநடத்தவார். அதற்காக அதிகமாக ஜெபிக்க வேண்டும்.

31.10.24 வியாழன் : பிலேமோன் 1:5 என் ஜெபங்களில் உம்மை நினைத்து, எப்பொழுதும் என் தேவனுக்கு ஸ்தோத்திரஞ்செய்து, நம்முடைய நினைவுகளில் எப்போதும் தேவனையும், விசுவாசிகளையும் நினைப்பதற்கு அவ்வாறு செய்யும் போது புதிய விசுவாசிகள் இன்னும் பலப்படுவார்கள். அதுமாத்திரமல்ல நம்முடைய ஜெபம் விசுவாசிகளுக்கு ஆசீர்வாதமாகவும் ஆலோசனையாகவும் இருக்கும். இதனால் அவர்கள் ஆவிக்குரிய வாழ்க்கையை இன்னும் அதிகமாக பயன்பட தேவன் உதவிச் செய்வார். விசுவாசிகளின் வளர்ச்சியே நம்முடைய தாகமாகவும், பாரமாகவும் இருக்க வேண்டும். கர்த்தர் நம்மையும் இன்னும் வழிநடத்துவார். ஆமென்.

## ஊழியப் பகிர்மானங்கள்

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே, மாதந்தோறும் நாம் நடத்திக்கொண்டிருக்கும் ஊழியங்களுக்காக நீங்கள் செய்கிற ஜெபங்களில் ஆவியானவர் கிரியைச் செய்கிறார். ஆண்டவருடைய விருப்பம் என்னவென்றால் நீங்களும் தேவ நடத்துதலோடு ஐக்கிய ஜெபங்களிலும், ஊழியங்களிலும் கலந்து கொள்ள வேண்டும் ஏற்ற வேளையிலே நீங்களும் ஊழியஞ் செய்ய வேண்டும். நம் ஐக்கிய வாக்குத்தத்தங்கள் யாவும் இன்னும் நிறைவேற போராடி ஜெபியுங்கள். அதிசீக்கிரமாய் வரயிருக்கின்ற இயேசுவின் வருகையில் நாம் அனைவரும் காணப்பட வேண்டும். ஏறத்தாழ ஐம்பது ஆண்டுகளாக நம் ஐக்கியத்தின் மூலமாக சந்திக்கப்பட்ட ஆத்துமாக்கள், உலகில் பல்வேறு நாடுகளில் வாழ்ந்து வருகிறார்கள். ஊழியமும் செய்துக்கொண்டிருக்கிறார்கள். இவர்களுக்காகவும் நீங்கள் பாரத்தோடு ஜெபிக்க வேண்டும். சீக்கிரமாக எழுப்புதல் என்ற ஊழியமும் அநேகருக்கு ஆசீர்வாதத்தை கொண்டு வர நாங்கள் ஜெபிக்கிறோம். தடைச்செய்கிற சாத்தானுடைய கிரியைகளையும் அழித்துப்போட வேண்டும். இயேசுவைப் பற்றி அறிந்த நாம் சாத்தானுடைய தந்திரங்களையும் நாம் அறிந்துக் கொள்ள வேண்டும். தேவன் அப்படிப்பட்ட கிருபைகளை இன்னும் நமக்குத் தருவார். எல்லாவற்றிருக்கும் மேலாக பின்மாற்றம் என்கிற சோதனை விசுவாசிகள், ஊழியர்களுக்கு ஒருபோதும் வராதபடி கர்த்தர் நம் ஐக்கியத்தை சுற்றிலும் மதிலாக நின்று வழிநடத்துவார்.

**இன்னும் பரிசுத்த ஆவியானவரின் வல்லமை ஊழியங்களில் காணப்படவும், திரளான ஜனங்கள் ஊழியங்களில் பங்கு பெறவும், ஊழியத்தில் அற்புத அடையாளங்கள் தாராளமாக நடக்கவும், 9 வரங்களும் ஊழியத்தில் செயல்பட ஜெபியுங்கள். ஐக்கியத்தை நடத்த இன்னும் ஞானம் கிடைக்க ஜெபியுங்கள். நீங்கள் குடும்பத்துடன் ஜெபங்களில் பங்கு பெறுங்கள். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமென்.**

பெண்கள் பகுதி

# கர்த்தருக்கு ஊழியஞ் செய்த ஊழியக்காரி பெபேயாள் ரோமர் 16:1

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதரிகளுக்கு என் வாழ்த்துக்களை கூறிக் கொள்கிறேன். இந்த மாதத்தில் கெங்கிரேயா ஊர் சபையில் ஊழியக்காரியாக இருந்த பெபேயாளைப் பற்றித் தியானிப்போம்.

இந்த பெபேயாளைப் பற்றி ரோமர் 16:1,2 ஆம் வசனத்தில் கூறப்பட்டுள்ளது. கெங்கிரேயா ஊர் சபைக்கு ஊழியக்காரியாகிய நம்முடைய சகோதரி பெபேயாளை நீங்கள் கர்த்தருக்குள் பரிசுத்தவான்களுக்குகேற்றப்படி ஏற்றுக்கொண்டு, எந்தக் காரியத்தில் உங்கள் உதவி அவளுக்குத் தேவையாயிருக்கிறதோ அதிலே நீங்கள் அவளுக்கு உதவி செய்ய வேண்டுமென்று அவளை உங்களிடத்தில் ஒப்புவிக்கிறேன்; அவள் அநேகருக்கும் எனக்கும் கூட ஆதரவாயிருந்தவள் என்று எழுதப்பட்டுள்ளது.

## முதலாவதாக ஒரு சபையை நடத்தின ஊழியக்காரி பெபேயாள் : ரோமர் 12:1

நம்மைப் போல பெண்ணாக வாழ்ந்த பெபேயாள் கெங்கிரேயா ஊர் சபைக்கு ஊழியக்காரி என்று கூறப்பட்டுள்ளது. அப்படியானால் இந்த சகோதரி ஒரு சபையை நடத்திச் சென்ற ஊழியக்காரியாக இருந்திருக்கிறாள். இப்படி ஊழியக்காரியாக அவள் இருந்தபடியினால் தான் அவள் பெயரை பவுல் தான் எழுதிய ரோமர் நிருபத்தில் எழுதியிருக்கிறார். இதைத் தியானிக்கிற பெண்களாகிய நாமும் நம்மால் இயன்ற அளவு ஊழியம் செய்ய வேண்டும். நான் நினைக்கிறேன் இந்தச் சகோதரி தன் வீட்டிலே தான் ஒரு சபையை ஏற்படுத்தி அதிலே ஊழியம் செய்திருக்கலாம். இப்படி ஒரு பெண்ணால் ஓர் சபையை நடத்த முடியுமானால் நாமும் பல வழிகளில் நம்மால் முடிந்தவரைக்கும் ஊழியம் செய்யலாம். ஒன்றுமே முடியாவிட்டாலும் ஜெப ஊழியம் செய்யலாம். இந்தப் பெபேயாள் ஒரு சபைக்கு ஊழியக்காரியாக இருந்ததுபோல நாமும் ஊழியம் செய்ய வேண்டும் (ரோமர் 12:13). அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள்; ஆவியிலே அனலாயிருங்கள். கர்த்தருக்கு ஊழியம் செய்யுங்கள். இந்த ஊழியக்காரியாகிய பெபேயாள் போல ஊழியஞ்செய்ய அர்ப்பணிப்போம். ஆமென். அல்லேலூயா!

## இரண்டாவதாக பவுலினால் சாட்சி பெற்ற சகோதரி பெபேயாள் : ரோமர் 16:1

கெங்கிரேயா ஊர் சபைக்கு ஊழியக்காரியாகிய நம்முடைய சகோதரி பெபேயாளை நீங்கள் கர்த்தருக்குள் பரிசுத்தவான்களுக்கேற்றபடி ஏற்றுக் கொள்ள வேண்டும் என சொல்லப்பட்டுள்ளது. அப்படியானால் இந்த பெபேயாளை பவுல் நம்முடைய சகோதரி என்று சாட்சி சொல்கிறார். இந்த மகள் தன் வீட்டாருக்கும், சபைக்கும், ஊழியக்காரராகிய பவுலுக்கும் ஒரு உண்மையான சகோதரியாக தன் வாழ்வில் நடந்து கொண்டாள். பவுல் பல சபைகளை நிறுவின, பல நிருபங்களை எழுதிய, பல அற்புதங்கள் செய்த மிகப் பெரிய ஊழியக்காரர். அவர் தான் இந்த ஊழியக்காரியாகிய பெபேயாளை நம்முடைய சகோதரி என கூறுகிறார். இந்தச் சகோதரி எல்லோரையும் நேசிப்பவளாகவும், ஊழியர்களுக்கு தன் அன்பைக் காட்டுகிறவளாகவும், எல்லோரையும் விட பவுலை அதிகம் நேசிக்கிறவளாக இருந்தாள். அதனால் தான் பவுல் இந்த சகோதரியைப் பார்த்து சொல்கிறார். நம்முடைய சகோதரி என்று கூறுகிறார். நாமும் நம்முடன் இருக்கும் குடும்பத்தாரிடம், ஐக்கியத்தில் உள்ளவர்களிடம், ஊழியக்காரர்களிடம் இப்படிப்பட்ட சாட்சியை நம் சகோதர சிநேகத்தின் மூலம் காட்ட வேண்டும். இப்படியாக நம்முடைய சகோதரி என்று பவுல் இச்சகோதரியை பாராட்டினார். நாம் இச்சகோதரியைப் போல நம் கணவரிடமும், நம் பிள்ளைகளிடமும், நம் கூட வாழ்பவர்களிடமும் சகோதர சிநேகம் உள்ளவர்களாக அன்பாக வாழ்வோம். அன்பைக் காட்டுவோம். ஆமென்! அல்லேலூயா!!

## மூன்றாவதாக அநேகருக்கும், பவுலுக்கும் ஆதரவாயிருந்த பெபேயாள் : ரோமர் 12:2

இந்த பெபேயாள் அநேகருக்கும், பவுலுக்கு ஆதரவாயிருந்தாள். இந்தச் சகோதரி தன் சபைக்கு வருகிற யாவருக்கும் உதவி செய்கிறவளாக இருந்தாள். அதோடு மட்டுமல்ல பவுலாகிய ஊழியக்காரருக்கும் அநேக காரியங்களில் ஆதரவாயிருந்தாள் என சொல்லப்படாவிட்டாலும் அவள் அநேகருக்கும் ஜெப உதவி, ஆலோசனை மூலம் உதவி, தன்னால் இயன்ற அளவில் உதவி செய்து ஆதரவாயிருந்திருப்பாள். பெண்களாகிய நாமும்கூட இச்சகோதரியைப் போல நம் வாழ்நாட்களில் பல விதங்களில் நம் குடும்பத்திற்கும், ஐக்கியத்திற்கும், ஊழியங்களுக்கும் உதவி செய்கிறவர்களாகவும், ஆதரவு காட்டுகிறவர்களாகவும் காணப்பட வேண்டும். நாமும் நம் வாழும் இந்த நாட்களில் இச்சகோதரியைப் போல வாழ்ந்து அநேகருக்குச் சாட்சியாகவும், ஊழியஞ்செய்கிறவர்களாகவும், ஆதரவுள்ளவர்களாகவும் காணப்படுவோம். ஆமென்! அல்லேலூயா!!

இச்சகோதரி மூலம் நாம் கற்றுக் கொள்வது இவள் ஒரு சபையில் ஊழியஞ்செய்கிற சகோதரி, பவுலினால் சாட்சியாக நம்முடைய சகோதரி என பாராட்டப்பட்ட சகோதரி, பவுலுக்கும், அநேகருக்கும் ஆதரவாயிருந்த சகோதரி எனவும் சொல்லப்பட்டுள்ளது. இப்படி இவள் வாழ்ந்ததினால் தான் இவள் பெயர் பவுலினால் எழுதப்பட்ட ரோமர் நிருபத்தில் எழுதப்பட்டுள்ளது. நாமும் இப்படி வாழ்வோம் தேவன் நம்மையும் ஆசீர்வதிப்பார். ஆமென்! அல்லேலூயா!!

எழுப்புதல் ஜெப ஐக்கியம், சுரண்டை.

## வேதாகமம் கூறும் கடைசிக்கால சம்பவங்கள்

**அநேகருடைய அன்பு தணிந்துப்போம்.** மத்தேயு 24:12

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே, மத்தேயு 24,25 ஆகிய அதிகாரங்களை வாசிக்கும் போது, கடைசிக்காலம் எப்படியிருக்கும் என்பதையும், இயேசுவின் வருகையைக் குறித்து தெளிவான விளக்கத்தையும் நாம் வாசிக்க முடியும். இப்பகுதியில் மத்தேயு 24:12ம் வசனத்தில், அக்கிரமம் மிகுதியாவதினால், அநேகருடைய அன்பு தணிந்துபோம் என்ற வசனத்தை தியானிப்போம். அன்பு என்பது உலகத்தையே அசைத்துக் காட்டும் பெரிய சக்தியாகும். இப்படிப்பட்ட அன்பு உடையவர்களாக நாம் இருக்க வேண்டும் என்று I கொரிந்தியர் 13ம் அதிகாரம் முழுவதும் நமக்கு தெளிவாக அன்பைப் பற்றி நாம் வாசிக்கிறோம். அன்பு உடையவர்களாகவும் இருக்க வேண்டும் என்பதற்கு, பரிசுத்த ஆவியானவரே நமக்கு சாட்சி கூறுகின்றார். அக்கிரமம் மிகுதியாகும் போது, அன்பு தணியத்தொடங்கும். இக்கடைசிக்காலத்தில் நாம் ஒவ்வொருவரும் அக்கிரமச் செய்கையை வெறுத்து, அன்பைக் கூட்டி வழங்க அழைக்கப்பட்டுள்ளோம். பரிசுத்த ஆவியைக் குறித்து, ரோமர் 5:5ல் நாம் இவ்வாறு வாசிக்கின்றோம். மேலும் நமக்கு அருளப்பட்ட பரிசுத்த ஆவியினாலே தேவ அன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறபடியால் அந்த நம்பிக்கை நம்மை வெட்கப்படுத்தாது என்ற வசனத்தை வைத்து ஜெபிக்கும் போது, ஒரு பெரிய மாற்றம் உண்டாகிறது. இதற்கு சாட்சியாக அப்போஸ்தலனாகிய பவுலை ஒரு சாட்சியாக தியானிப்போம்.

அப்போஸ்தலர் 9ம் அதிகாரத்தை வாசிக்கும்போது, சவுல் என்ற பவுலைப் பற்றி வாசிக்கின்றோம். இவன் ஓர் அக்கிரமச் செய்கைக்காரனாய் காணப்பட்டான். சவுல் என்பவன் இன்னும் கர்த்தருடைய சீஷரைப் பயமுறுத்திக் கொலை செய்யும்படி சீறிப் பிரதான ஆசாரியரிடத்திற்குப் போய், இந்த மார்க்கதாராகிய புருஷரையாகிலும் ஸ்திரீகளையாகிலும் தான் கண்டுபிடித்தால், அவர்களைக் கட்டி எருசலேமுக்குக் கொண்டுவரும்படி, தமஸ்குவிலுள்ள ஜெபஆலயங்களுக்கு நிருபங்களைக் கேட்டு வாங்கினான் என்று அப்.9:1,2 ஆகிய வசனங்களில் வாசிக்கின்றோம். இந்த சவுல் அக்கிரமம் செய்கைக்காரராய் காணப்பட்டார் என்று நாம் காண்கிறோம். அவன் பிரயாணமாய் போய், தமஸ்குவுக்குச் சமீபித்தபோது, சடிதியிலே வானத்திலிருந்து ஒரு ஒளி அவனைச் சுற்றிப் பிரகாசித்தது. அப்போது சவுல், தேவனால் மாற்றம் பெற்று பவுலாக மாறினான். அதற்கு பின்பு சவுல் என்ற பவுல், பெரிய மாற்றம் பெற்றார். அது என்னவென்றால், அனனியா மூலம் பரிசுத்த ஆவியால் பவுல் நிரப்பப்பட்டார். இந்த தூய ஆவி பவுலுக்குள் வந்த போது, அக்கிரமக்காரராய் விளங்கிய சவுல், அன்பின் ஊழியனாக, பரிசுத்த பவுலாக மாறி, அநேகருக்கு ஆசீர்வாதமாய் மாறினான். அன்பின் ஆவி பவுலுக்குள் வந்தது. அவனிடம் முன்பு காணப்பட்ட அக்கிரமம் மாறியது. அன்பின் ஊழியனாக மாறி, அநேக சபையைக் கட்டினார். எல்லா விசுவாசிகளுக்கும் மாதிரியாய் விளங்கினார். இன்றும் நம் அனைவருக்கும் பவுல் ஒரு முன்மாதிரியான ஊழியனாக விளங்குகின்றார்.

இந்தக் கடைசிக் காலத்தில் பவுலுக்குள் ஏற்பட்ட இந்த மாற்றம் எனக்கும், உங்களுக்கும், நம் அனைவருக்கும் தேவை. கடைசிக்காலத்தில் மாம்சமான யாவர் மேலும் என் ஆவியை ஊற்றுவேன் என்று தேவன் சொன்ன வார்த்தை நிறைவேற வேண்டும். இந்த ஆவி ஊற்றப்படும்போது, ஒரு பெரிய மாற்றம் உலக அளவில் நிச்சயம் ஏற்படும். இந்த மாற்றம் இல்லாமல் நாம் இருப்போமானால் நமக்குள் அக்கிரமம் தான் பெருகத் தொடங்கும். இதற்கு நாம் இடம் கொடுக்கக்கூடாது. சாத்தான் பல சோதனையைக் கொண்டு வந்து நாம் பெற்றிருக்கின்ற கிறிஸ்துவின் அன்பை தடை செய்யப் பல தந்திரங்களைக் கொண்டு வருவான். நாம் பிசாசுக்கு எதிர்த்து நிற்கப் பழகிக் கொள்ள வேண்டும். பரிசுத்த ஆவி நம்மில் காணப்படும் போது நாம் இருக்கின்ற திருச்சபையிலும், நம்முடைய சொந்தக் குடும்பத்திலும், நாம் வேலை செய்யும் இடங்களிலும் நம்மோடு பழகுகிறவர்களோடும் நாம் அன்பை இன்னும் கூட்டி வழங்க வேண்டும். இதற்கு தேவன் உதவி செய்து நம்மை அன்பின் ஊழியர்களாக மாற்றுவார். சவுலின் சுபாவங்கள் மாறி அவர் கிறிஸ்துவின் அன்பில் நிரப்பப்பட்டது போல இப்படிப்பட்ட கிருபைகளை தேவன் நமக்குத் தருவார். இன்னும் அதிகமாக வேதம் வாசித்து ஜெபிக்கும் பொழுது நமக்குள் பெரிய மாற்றம் உண்டாவதை நாம் காணலாம்.

சுரண்டை எழுப்புதல் ஜெப ஐக்கியத்திலும் ஆரம்ப நாள் முதற்கொண்டு தேவன் நமக்கு வழி காட்டியாகத் தந்தது கிறிஸ்துவின் அன்பின் ஐக்கியமேயாகும். இந்த அன்பு இன்னும் எல்லாரிடத்திலும் கடந்து போக ஆண்டவர் உதவி செய்வார். இந்த அன்பின் மூலம் வரும் நாட்களில் ஆத்துமாக்கள் ஏராளம் இரட்சிக்கப்பட்டு அபிஷேகம் பெறுவார்கள். நீங்கள் இருக்கின்ற பகுதிகளிலும் அன்பின் ஆவி இறங்கி பெரிய மாற்றங்களை தேவன் செய்யப் போகிறார். ஒரு எழுப்புதல் காலத்தை நாம் விரைவில் காண இருக்கின்றோம். அப்போது அக்கிரமம் அழிந்து அன்பு மிகுதியாகும். ஒரு மனிதரை கூட நாம் வெறுக்கவோ, பகைக்கவோ, கசப்புகளைக் காண்பிக்கவோ முடியாது. அப்படிப்பட்ட சிறப்பான ஆசீர்வாதத்திற்காக கர்த்தர் நம் எல்லோரையும் அழைத்திருக்கிறார். அதுமட்டுமல்ல சாதாரணமாக வாழ்கின்ற நம்மை தேவன் அசாதாரணமான ஊழியர்களாக மாற்றி ஆசீர்வதிப்பார். ஆமென்.

**எழுப்புதல் ஜெப ஐக்கியம்,** சுரண்டை.

## முக்கியமான ஜெப விண்ணப்பம்

அப்போஸ்தலர் நாட்களில் பரிசுத்த ஆவி ஜெபிக்கும் இடத்தில் ஊற்றப்பட்டதை போல, நம் ஐக்கிய ஜெபத்திலும், அனைத்து ஊழியர்கள் மேல் இந்த ஆவி ஊற்றப்பட ஜெபித்து வருகின்றோம்.

நீங்களும் ஐக்கியத்தில் தேவ ஆவி இன்னும் பலமாய் ஊற்றப்பட ஜெபியுங்கள். அப்போஸ்தலர் நாட்களில் பலத்த அற்புதங்கள் நடைபெற்றது போல, இந்நாட்களிலும் சீக்கிரமாய் ஐக்கியத்தில் தூய ஆவி ஊற்றப்பட நீங்கள் இருக்கும் இடத்தில் எங்களுடன் ஒரு மனமாய் ஜெபிக்க அன்புடன் அழைக்கிறோம். கர்த்தர் உங்களைக் கொண்டும் பலத்த அற்புதங்களை செய்வார். ஆமென். நம் அனைவரின் ஐக்கியமும் ஆண்டவரோடு இருக்க வேண்டும். இப்படியிருக்கும்போது தேவன் நம்மோடு பேசுவதையும் நம்மை பல்வேறு இடங்களுக்கு கொண்டுச் சென்று பயன்படுத்துவதையும் நாம் காணலாம்.

### குறிப்பு :

1. ஐக்கியத்திற்காய் அதிகம் ஜெபித்து, ஊழியத்தில் பங்கு பெறுங்கள்.
2. பத்திரிக்கையை அநேகருக்கு அறிமுகம் செய்யுங்கள்.
3. உங்கள் செல்போன் எண்ணை ஐக்கியத்திற்குத் தெரிவியுங்கள்.
4. உங்கள் பிரச்சனைகளுக்காக ஜெபிப்போம்
5. உங்கள் ஜெபம் ஐக்கியத்திற்கு தினமும் தேவை.
6. தேவன் உங்களை அழைத்தால் ஐக்கிய ஊழியங்களை உங்கள் பகுதியில் செய்யுங்கள்.
7. இம்மாதம் அனைத்து ஊழியங்களும் அபிஷேகத்துடன் நடைபெறும்.
8. ஐக்கியத்தின் மூலம் இரட்சிக்கப்பட்டவர்கள் பிறரையும் இரட்சிப்பிற்குள் வழி நடத்துங்கள்.
9. எழுப்புதல் TV என்ற சேனல் முகவரியில் YOU TUBE ஊழியம் நடைபெற்று வருகின்றது

**தொடர்புக்கு:**

**90255 53614, 99429 50132**

## நடப்புச் செய்திகள்.

1. ஹமாஸ், ஹிஸ்புல்லா அமைப்பின் தலைவர்கள் அடுத்தடுத்து கொல்லப்பட்டதைத் தொடர்ந்து, ஈரான் – இஸ்ரேல் இடையே போர் மூளும் அபாயம் அதிகரித்துள்ளது. இதனால், இஸ்ரேலுக்கு உதவும் வகையில் மத்திய கிழக்கில் அமெரிக்கா தனது ராணுவ இருப்பை அதிகரிக்கிறது. அமெரிக்க போர்க்கப்பல்கள் மத்திய கிழக்கு நோக்கி நகர்த்தப்பட்டிருப்பது போர் பதற்றத்தை அதிகரித்துள்ளது.
2. ஒலிம்பிக் ஆண்கள் ஹாங்கியில் லீக் சுற்று முடிவடைந்த நிலையில், காலிறுதி ஆட்டங்கள் இன்று நடைபெற உள்ளன.
3. அமெரிக்க அதிபர் தேர்தல் வரும் நவம்பர் 5ம் தேதி நடக்க உள்ளது. இதில் ஆளும் ஜனநாயக கட்சி சார்பில் அதிபர் ஜோ பைடன் தேர்தல் களத்திலிருந்து விலகிய நிலையில், துணை அதிபர் கமலா ஹாரிஸ் போட்டியிடுகிறார். குடியரசு கட்சி சார்பில் முன்னாள் அதிபர் டொனால்ட் டிரம்ப் களமிறங்கி உள்ளார்.
4. சோமாலியாவில் மொகடிஷு நகரின் அப்டியாஜிஸ் பகுதியில் மிகவும் புகழ் பெற்ற லிடோ கடற்கரை உள்ளது ஏராளமான உள்ளூர் மற்றும் சுற்றுலா பயணிகளை கவரும் லிடோ கடற்கரையையொட்டி உணவு மற்றும் தங்கும் விடுதிகள் உள்ளன. இந்த கடற்கரையில் நேற்று முன் தினம் இரவு ஏராளமானோர் குழுமியிருந்தனர். அப்போது அங்கு வந்த 5 மர்ம நபர்கள் மக்களை நோக்கி துப்பாக்கியால் சுட்டனர். இந்த தாக்குதல் சம்பவங்களில் 32 பேர் பலியாகினர்.
5. வங்கதேச உச்ச நீதிமன்ற உத்தரவுப்படி, சுதந்திர போராட்ட வீரர்களின் வாரிசுகளுக்கு அரசு பணிகளில் 30% இடஒதுக்கீடு வழங்கும் சட்டத்தை மீண்டும் கொண்டு வர ஷேக் ஹசீனா தலைமையிலான அரசு முடிவு செய்தது.
6. டெல்லியில் வேளாண்துறை அமைச்சகத்தில் கணக்கு கட்டுப்பாட்டாளராக பணியாற்றியவர் ஹர்பிரீத்சிங். இவர் ஓய்வு பெற்ற போலீஸ் உதவி ஐஜீ மல்விந்த் சிங் சித்துவின் மகளை திருமணம் செய்து கொண்டார். கருத்து வேறுபாடு காரணமாக இருவரும் விவாகரத்து பெற முடிவு செய்தனர். இந்த வழக்கு சண்டிகர் மாவட்ட நீதிமன்றத்தில் நடந்து வருகிறது.
7. மத்தியப்பிரதேசத்தின் ரேவா மாவட்டத்தில் கர் காவல்நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் தனியார் பள்ளி ஒன்று இயங்கி வருகின்றது. நேற்கு பள்ளி முடிந்த மாணவர்கள் சிலர் வீடு திரும்பிக் கொண்டு இருந்தனர். அந்த பகுதியில் கைவிடப்பட்டு மோசமான நிலையில் இருந்த கட்டிடத்தின் சுவர் திடீரென இடிந்து விழுந்தது. இதில் அந்த வழியாக வந்த சிறுவர்கள் சிக்கினார்கள். இடிபாடுகளில் சிக்கி 4 சிறுவர்கள் உயிரிழந்தனர்.

## “உங்கள் விசுவாசம் உலகமெங்கும் பிரசித்தமாகிறபடியினாலே...” ரோமர் 1:8

### உலகமெங்கும் உள்ள சூழ்நிலைகளில் ஒவ்வொருவருக்குள்ளும் தேவன் கிரியை செய்ய

1. ஏசாயா 28:26 அவனுடைய தேவன் அவனை நன்றாய்ப் போதித்து அவனை உணர்த்துகிறார். இந்த வார்த்தையின்படியே தேவன் நம் ஒவ்வொருவரையும் நன்றாய் இன்னும் போதித்து உணர்த்த ஜெபிப்போம்.
2. அப்போஸ்தலர் 2:17 கடைசிநாட்களில் நான் மாம்சமான யாவர் மேலும் என் ஆவியை ஊற்றுவேன். யாவர் மேலும் தம் ஆவியை தேவன் அளவில்லாமல் ஊற்றி, தேவ வார்த்தையை அனுப்பி விசுவாசம் ஜனங்களுக்குள் பிரசித்தமாக ஜெபிப்போம்.
3. அப்போஸ்தலர் 3:10 அவனுக்குச் சம்பவித்ததைக் குறித்து மிகவும் ஆச்சரியப்பட்டுப் பிரமித்தார்கள். ஆம்! விசுவாசம் உலகமெங்கும் விளங்க, ஆச்சரியப்பட்டு பிரமிக்கத்தக்க அற்புதங்களை தேவன் கிருபையாய் இறங்கி செய்ய ஜெபிப்போம்.
4. சகரியா 12:10 கிருபையின் ஆவியையும், விண்ணப்பங்களின் ஆவியையும் ஊற்றுவேன். தேவன் விசுவாசிகளாகிய நம் மீது அளவில்லாத கிருபையின் ஆவியையும், விண்ணப்பங்களின் ஆவியையும் ஊற்றி நம்பிக்கையோடும் விசுவாசத்தோடும் ஜெபிக்க வைக்க கிருபையைக் கட்டளையிடும்படியாய் ஜெபிப்போம்.
5. நாகூம் 2:1 சிதறடிக்கிறவன் உன் முகத்துக்கு முன்பாக வருகிறான். அரணைக் காத்துக்கொள், வழியைக் காவல் பண்ணு... எச்சரிப்பாய் இருந்து தேவன் தந்த மகா பரிசுத்தமான விசுவாசத்தை காத்துக் கொள்ள முன்கூட்டியே ஆவியில் ஜெபித்து உலகமெங்கும் உள்ள சூழ்நிலைகளில் ஒவ்வொருவருக்குள் ஆவியில் அனலுண்டாக ஜெபிப்போம்.
6. மாற்கு 9:29 அதற்கு இயேசு: இவ்வகைப் பிசாசு ஜெபத்தினாலும், உபவாசத்தினாலுமேயன்றி மற்றெவ்விதத்தினாலும் புறப்பட்டுப்போகாது என்றார். கிறிஸ்து இயேசுவுக்குள் காணப்பட்ட ஜெபமும், உபவாசமும் ஜெபிக்கிற நமக்கும் தேவன் தந்து பிசாசுகளின் வல்லமை செயலிழக்கப்பட ஜெபிப்போம்.
7. எரேமியா 20:11 கர்த்தரோ பயங்கரமான பராக்கிரமசாலியாய் என்னோடு இருக்கிறார். இந்த விசுவாசம் உலகமெங்கும் உள்ள விசுவாசிகளுக்கு உண்டாகி தேவனை மகிமைப்டுத்திக் கொண்டேயிருக்க ஜெபிப்போம்.
8. எரேமியா 9:1 ஆ! என் தலை தண்ணீரும் என் கண்கள் கண்ணீரூற்றுமானால் நலமாயிருக்கும். ஆழமான ஜெப ஆவி ஊழியர்களின் சிந்தைகளிலும், எண்ணங்களிலும் தேவன் உண்டாக்கும்படியாய் ஜெபிப்போம்.
9. லூக்கா 6:12 அந்நாட்களிலே, அவர் ஜெபம் பண்ணும்படி ஒரு மலையின்மேல் ஏறி... இந்தக் கிருபையை தேவன் ஒவ்வொரு பொறுப்பாளர்களுக்கும் தந்து இயேசுவைப் பற்றும் விசுவாசம் செயல்பட ஜெபிப்போம்.
10. யோனா 3:5 அப்பொழுது நினிவேயிலுள்ள ஜனங்கள் தேவனை விசுவாசித்து..., இந்த விசுவாச எழுப்புதல் உலகமெங்கும் உள்ள ஜனங்களுக்குள் தேவன் உண்டாக்கும்படியாய் ஜெபிப்போம்.
11. II இராஜாக்கள் 5:1 அவனைக் கொண்டு கர்த்தர் சீரியாவுக்கு இரட்சிப்பைக் கட்டளையிட்டார். வியாதியுள்ள மனிதர்களைக் கொண்டு தேவன் தேசத்தில் இரட்சிப்பைக் கட்டளையிட ஜெபிப்போம்.
12. சகரியா 10:1 பின்மாரிகாலத்து மழையை கர்த்தரிடத்தல் வேண்டிக் கொள்ளுங்கள். கர்த்தர் உலகமெங்கும் உள்ள சூழ்நிலைகளில் தேசத்தின் ஜனங்களின் மேல் பின்மாரிகாலத்து மழையை ஊற்ற ஜெபிப்போம்.

**எழுப்புதல் ஜெப ஐக்கியம்,** சுரண்டை.

## சத்துருக்கள் எல்லாரையும் சங்கரிக்கும் அபிஷேகம் - 141

**உன் சத்துருக்கள் எல்லாரும் சங்கரிக்கப்படுவார்கள்.** மீகா 5:9

**கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே,** நாம் மாதந்தோறும் புதிய அபிஷேகத்தையும், அதன் கிரியைகளையும் சிந்தித்தும், எழுதியும், அனுபவித்தும் வருகிறோம். இந்த மாதத்தில் நமக்கு எதிராக செயல்படும் சத்துருவாகிய சாத்தானின் கிரியைகளை சங்கரிக்கும் அபிஷேகத்தை நன்றாக அறிந்து கொள்ளவும், அதற்கு வேண்டிய கிருபைகளால் நிரப்பப்பட போகிறோம். என்றைக்கு நாம் இரட்சிக்கப்பட்டு, இயேசுவுக்குள் வருகின்றோமோ, அன்று முதல் நமக்கு தேவ பாதுகாப்பு முழுவதும் கிடைக்கிறது. அதே வேளையில் நமக்கு எதிராக செயல்படும் சாத்தான் தனது கிரியைகளை செய்யத் தொடங்குவான். நாம் தேவ கிருபையில் நிலைத்திருக்கும் போது, சாத்தானை நாம் மேற்கொள்ளமுடியும். நாம் பெற்றுக்கொண்ட அபிஷேகம் நம்மை பாதுகாப்பது மட்டுமல்ல, சத்துருக்களாகிய சாத்தானின் கிரியைகளை சங்கரிக்கும் வல்லமையையும் நாம் பெற்றுக் கொள்ளுகிறோம். ஆமென். சத்துருக்களை சங்கரிக்கும் அபிஷேகத்துடன் வாழ்ந்து வெற்றி பெற்றவர்களை இச்செய்தியில் தொடர்ந்து தியானிப்போம்.

### 1. சத்துருக்களை முற்றிலும் சங்கரித்த அபிஷேகம் பெற்ற யோபு :

யோபுவின் புத்தகத்தில் முதல் இரண்டு அதிகாரங்களை நாம் வாசித்துப் பார்க்கையில் சாத்தான் யோபுவுக்கு விடுத்த சவால் உள்ள வார்த்தைகளை நாம் காணலாம். கடைசியாக சாத்தான் கிரியை செய்து யோபுவின் உள்ளங்கால் தொடங்கி அவன் உச்சந்தலை மட்டும் கொடிய பருக்களால் அவனை வாதிக்கிறான் என்று யோபு 2:7ல் நாம் வாசிக்கின்றோம். இது தவிர யோபிவின் மனைவி யோபைப் பார்த்து நீர் இன்னும் உமது உத்தமத்தில் உறுதியாய் நிற்கிறீரோ என்றும், தேவனை தூஷித்து ஜீவனை விடும் என்று கூறி யோபுவை சோதித்தான். ஆனாலும் யோபிவிற்கு தேவன் வைத்த அபிஷேகம் அவரை ஆசீர்வதித்தது. ஆண்டவர் கிரியை செய்தார். யோபுவின் பிந்திய வாழ்க்கை மிக செழிப்பாக மாறியது. கர்த்தர் யோபுவை இரண்டு மடங்கு ஆசீர்வதிக்க காரணம், அவருக்குள் காணப்பட்ட அபிஷேகமேயாகும். இந்த அபிஷேகம் நமக்குள் வரும் போது நாமும் சோதனைகளை ஜெயிப்பது மட்டுமல்ல இரண்டு மடங்கு ஆசீர்வாதத்தையும் பெற்றுக் கொள்ள முடியும்.

### 2. சத்துருக்களை முற்றிலும் சங்கரித்த அபிஷேகம் பெற்ற தாவீது :

சத்துருக்களை முற்றிலும் ஜெயித்த யோபு போல, தாவீதும் சத்துருக்களை முற்றிலும் ஜெயித்தார் சாமுவேல் தீர்க்கன் மூலம் அபிஷேகம் பெற்றிருந்தார் தாவீது. அவர் அபிஷேகம் பெற்ற நாள் தொடங்கி, சவுல் அவருக்கு எதிராக செயல்பட்டார். சவுல் தன் ராஜ்யபாரத்தை சிறப்பாக நடத்துவதை விட, தாவீதை கொல்ல ஆசையாய் இருந்தார். ஆனாலும் தாவீதுக்குள் அபிஷேகம் இருந்தபடியால், கர்த்தர் தாவீதை சவுல் கையில் ஒப்புக்கொடாமல் பாதுகாத்து வந்தார். சங்கீதம் 23:5ம் வசனத்தை வாசிக்கும் போது, என் சத்துருக்களுக்கு முன்பாக நீர் எனக்கு ஒரு பந்தியை ஆயத்தப்படுத்தி, என் தலையை எண்ணெயால் அபிஷேகம் பண்ணினீர் என்று எழுதப்பட்டுள்ளதை நாம் வாசிக்கும் போது, தாவீதுக்குள் இருந்த அபிஷேகம் அவரை எதிர்த்தவர்களை முற்றிலும் சங்கரித்த சம்பவத்தை நாம் வேதத்தில் வாசிக்கின்றோம். அபிஷேகம் ஒரு மனிதனுக்குள் வரும்போதும், அதை நாம் பெற்றுக் கொண்டு காத்துக் கொள்ள அழைக்கப்பட்டுள்ளோம்.

I யோவான் 2:27ம் வசனத்தை வாசிக்கும் போது, அவராலே பெற்ற அபிஷேகம் உங்களில் நிலைத்திருக்கிறது. ஒருவரும் உங்களுக்கு போதிக்க வேண்டுவதில்லை. அந்த அபிஷேகம் சகலத்தையும் குறித்து உங்களுக்குப் போதிக்கிறது... அபிஷேகம் பிசாசின் தந்திரங்களை முற்றிலும் நமக்குள் கிரியை செய்யாதபடி நம்மை காத்துக் கொள்ளும். இந்த அபிஷேகம் உங்களுக்கு உண்டா? இருக்குமானால் தொடர்ந்து ஜெபித்து அந்த ஆவியை இன்னும் அதிகம் தேவன் தர ஜெபியுங்கள். இதை அறிந்து தான் எலிசா, எலியாவிடமிருந்து இரண்டு மடங்கு ஆவியின் வல்லமையை கேட்டு பெற்றுக் கொண்டார். இனி வரும் காலங்களில் அபிஷேகம் இல்லாமல் நாம் நம் குடும்பத்தை நடத்துவது கடினமான காரியமாகும். சுருக்கமாக சத்துருக்களை முற்றிலும் முறியடிக்க தேவ ஆவி இன்னும் அதிகம் தேவை. இதற்காக ஊக்கமாக குடும்பமாகவும், சபையாகவும், குழுவாகவும், தனித்தும் ஜெபிக்க வேண்டும். ஆமென்.

**எழுப்புதல் ஜெப ஐக்கியம்,** சுரண்டை.

Registrar of Newspapers for India,
Registration 71982/98, New Delhi

TN/WPP-168/SR/2024-2026
Licenced to Post without prepayment
Posted at Surandai on 27th 28th of every month

Postal Registration Number of R.N.P,KOL /005/2024-2026
Date of Publication : September 26,2024
Date of Posting : September 27,2024 Posted at Surandai

# வேதத்தின் மகத்துவங்களில்... சில...

**"ஆழத்திலே தள்ளிக்கொண்டு போய்... வலைகளைப் போடுங்கள்."** லூக்கா 5:4

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, நாம் பயன்படுத்தி வரும் சத்திய வேதாகமம் ஒரு மகத்துவமான புத்தகமாகும். இதை நாம் அடிக்கடி வாசித்து தியானிக்கும் போது நம்முடைய சோர்வுகள் எல்லாம் மாறி அதற்குப் பதிலாக ஒரு தைரியம் நமக்கு உண்டாகும். நாம் எடுக்கின்ற காரியங்களில் ஒரு தெளிவுடன் நடக்க கர்த்தர் உதவி செய்வார். லூக்கா 5:1-10 ஆகிய வசனங்களை வாசித்துப் பார்க்கும் போது இராமுழுவதும் மீன் பிடிக்கப் பிரயாசப்பட்ட பேதுருவைப் பற்றியும் அவ்வாறு மீன்பிடிக்கும் போது ஒன்று கூட அகப்படாமல் அவர்கள் சோர்ந்து போனதைப் பற்றியும் நாம் வாசிக்கின்றோம். இந்தச் சூழ்நிலையில் இயேசு பேதுருவைக் கைவிடாமல், ஆழத்திலே தள்ளிக் கொண்டு போய் மீன் பிடிக்கும்படி உங்கள் வலைகளைப் போடுங்கள் என்று இயேசு கூறிய அதிசயமான ஆலோசனைகளையும் அதற்கு கீழ்ப்படிந்த பேதுரு தங்கள் வலைகள் கிழிந்து போகத்தக்கதாக மிகுதியான மீன்களைப் பிடித்ததாயும். பின் நாட்களில் மீனைப் பிடித்தப் பேதுரு மனுஷர்களைப் பிடிக்கக்கூடிய ஊழியக்காரராக மாறினதையும் வேதத்தில் நாம் வாசிக்கின்றோம். சோர்வாக இருந்த பேதுருவுக்கு தேவன் செய்த அற்புதங்கள் ஒரு மகத்துவமான ஆலோசனையாகும். இந்த ஆலோசனை பேதுருவுக்குக் கிடையாமல் இருந்தால் அவர் வாழ்க்கை வித்தியாசமாக மாறியிருக்கும். தேவன் அதற்கு அவனை ஒப்புக்கொடுக்கவில்லை.

இப்பகுதியை வாசிக்கும் நாம் சில வேளைகளில் நமக்கு நடைபெறக்கூடிய காரியங்கள் நடைபெறாமல் போகும் பொழுது நம்முடைய உள்ளம் சோர்வடைகிறது. சோர்ந்து போகிறவனுடைய சோர்வை தேவன் ஒரு போதும் அனுமதிக்க மாட்டார். நீங்கள் இப்பொழுது எந்த நிலையில் இருந்தாலும் உங்களுக்கு வேண்டிய ஆலோசனை வேதத்தில் எழுதப்பட்டுள்ளது. நீங்கள் வாசிக்கிற பகுதிகளை தொடர்ந்து வாசித்து ஜெபியுங்கள். உங்களுக்கு வேண்டிய அற்புதத்தை பரிசுத்த ஆவியானவர் வேதத்தில் எழுதி வைத்துள்ளார். ஒருவேளை அந்த மகத்துவம் உங்கள் கண்களுக்கு மறைக்கப்பட்டிருக்கலாம். இன்றைக்கு உங்களுடைய ஆவிக்குரிய கண்களைப் பரிசுத்த ஆவியானவர் திறந்து பேதுருவுக்கு வழிகாட்டினது போல உங்களுக்கும் வழி காட்டுவார். தைரியமாய் கிருபாசனத்தண்டையில் சேருங்கள்.

அன்பானவர்களே வேதம் நமக்கு எப்பொழுதும் வழிகாட்டி என்ற அனுபவத்தில் இன்னும் நாம் வளர்ந்து அநேகருக்கு வேதத்தின் மகத்துவங்களை விளக்கிக் காட்ட தேவன் உங்களை அழைத்துள்ளார். ஒரு வேளை பேதுரு கலங்கி நின்றது போல நீங்கள் நிற்காமல் பேதுருவைப் போல கலக்கத்தின் மத்தியிலும் உங்கள் இருதயத்தின் பாரத்தை கர்த்தரிடம் மாத்திரம் கூறுங்கள். அவர் உங்களுக்குப் போதித்து நீங்கள் நடக்க வேண்டிய வழிகளை உங்களுக்கு காட்டுவார். அப்பொழுது நீங்களும் உங்கள் பிள்ளைகளும் நீங்கள் செய்கிற ஊழியங்களிலும் ஒரு பெரிய உயிர்மீட்சியைக் காணலாம். அப்படி நீங்கள் செய்யும் பொழுது தேவன் செய்யும் காரிங்களை எங்களுடன் பகிர்ந்து கொள்ளலாம். ஆமென்.

*If undelivered please return to....*

**Bro.P.Duraisingh Gnanapragasam**

14-6-3(34) Ratna Complex, SURANDAI - 627 859.
Tenkasi (Dt), Tamil Nadu, India.
www.revival.org.in
Cell: 90255 53614, 99653 36459, 9942950132
Ph: 04633-290480

To.
Bro/Sis ______________________

______________________

______________________

Pin | | | | | |

Printed by P.Thanapaul, Published by P.Duraisingh Gnanapragasam owned by P.Duraisingh Gnanapragasam and Printed at Ravi Printers, 10-7-16 Bus-Stand Road, Surandai - 627 859. Tenkasi (Dist) and published at 14-6-3(34), Ratna Complex, Surandai - 627 859. Tenkasi (Dist) Editor P.Duraisingh Gnanapragasam.